# பெரியயெழுத்து
# மநுநீதிகாதல்

சுத்தப் பதிப்பு.

விலை அணா 4

T11591
R003J01
T.11591

உ

கடவுள் துணை.

ஆறைமாநகர்

சாமிநாத பிள்ளை யென்னும்

**தெய்வச்சிலையா பிள்ளை யவர்கள்**

திருவாய்மலர்ந்தருளிய

# மநுநீதிகாதல்.



சென்னை, இட்டா.

**சக்கரபாணிநாயுடு**

அவர்களால்

மதுரை வடக்குமாசிவீதி

மனோன்மணி விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

**1923.**

இதன் விலை) (அணா 8.

உ

கடவுள் துணை.

# மநுநீதி காதல்.

விநாயகர் துதி வேண்பா.

யானைமுக வானையுமை யாளரனார் பாலகனே
ஞானமுத லானகுரு நாதனே—மானிலத்தில்
ஆதிமனு நூலினுண்மை யாததனை யானுமொரு
காதலென வோதவருள் காண்.

புத்திவரு மெய்ஞ்ஞான போதமுறும் புண்ணியமுஞ்
சத்தியமா மேன்மைமிகத் தங்குமே—நித்தநித்தம்
சாதனை யாய்ப்புவியில் சாமிநா தன்சொல்மனு
நீதிநூல் பார்த்தால் நிதம்.

வாணி துதி.

பூமேவு லோகம் புகழுமனு நீதிநூல்
பாமேவு செஞ்சொற் பயனறிந்து யான்பாட
மூலக் கணேசன் முளரிப் பதம்போற்றி
வாலை சரஸ்வதியே வாக்கி லிருந்தருள்வாய்.

அவையடக்கம்.

வேதமுறை சொன்னிதிந்த மேதினியி லுள்ளமனு
நீதிமுறை தன்னை நிகழ்த்தினர் முன்னோர்கள்
வள்ளுவனு ரௌவைமுதல் வழுத்து மனுநீதி
தெள்ளரு தமிழ்க்கடலிற் சிற்றகப்பை முகந்தாற்போல்

மாலை சதக மநுநீதி சாரமென்றும்
ஞால மதிற்கவிஞர் நவின்றார் பலநூல்கள்
பண்ணும் பலநூலிற் பாடும் பொருளதனை
எண்ணியென்றன் சிந்தைக் கிசைந்த தறிந்தமட்டும்
ஞால மதிலுதிரும் நவமணியெல் லாம்பொறுக்கு
மாலையாய்க் கோத்த வகையாக விந்நூலைக்
காதலுட னியானுமொரு காதலெனப் பாடிவைத்தேன்
மாதவத்தோர் முத்தமிழின் வல்லோர் மனமகிழ

## ஆக்கியோன் பெயர்.

மாவளஞ்சேர் செம்பி வளநாடன் மிக்கான
பூவசிய னென்னும் புகழ்படைத்த கங்கைகுலன்
ஆதிவையை சங்குமுகத் தாறைநக ரிராம
நாதவேள் பாலன் நவிண்கவி ரஞ்சிதவான்
சீல மிகுமமிர்தச் செந்தமிழின் பாவினஞ்சொல்
மாலோ னருள்சிறந்த மாபார தப்ரசங்கன்
கையுற்ற நெல்லிக் கனிபோ லறியவென்று
தெய்வச்சிலை யானுரைத்த தெள்ளமிர்த மாமிதுவே
உற்றதொரு காவேரி யொன்றாய்ப் பெருகிவரச்
சிற்றூறல் நீருமதிற் சேர்ந்தங்கே யோடுதல்போல்
சந்திரனோ டம்பரத்திற் றாரகைகள் வாழ்வதுபோல்
செந்தமிழோர் முன்னே சிறியே னுரைத்ததமிழ்
புன்சொற் குதலையுங்கள் பிள்ளைமொழி போல்மகிழ்ந்து
என்சொல் லிதனை நித மின்பமெனக் கண்டருள்வீர்

## நூற் பயன்.

சத்தியா சத்தியமுஞ் சாதிமுறை மார்க்கங்கள்
உற்றதொரு தர்மங்க ளுதவி யுதவாமை
தன்மனைவி மைந்தரொடு தகமையுடன் வாழ்வதுவும்
பின்மனைவி வேசையர்கள் பேதத்துள் ளாவதுவும்
மானமீ னம்வாழ்வு மகிழ்ச்சியுடன் வஞ்சகங்கள்
தானுமுயர் கீர்த்திப்ர தாபம் பரிமளித்தல்
துற்பிறவி சற்சனர்கள் சோரமுட னுக்கினைகள்
நற்பிறவி யாயுள்விர்த்தி நற்பதங்கள் நல்லறிவு

கற்பனைக ளொப்பனைகள் கயவர் குணவிளக்கம்
எப்போதுந் தாளாண்மை யென்றுங் கடவாமை
காலத்தின் கற்பனைகள் கடவுளின் நிர்ணயங்கள்
ஞாலமதில் நன்றியுடனற்றவர் பத்திமுத்தி
சீதேவி மூதேவி சேரிடங்கள் தானமநு
நீதிமுறை வறுமை நிச்சயமாய்ச் சேரிடங்கள்
சேரா விடம்லோபஞ் சின்னத்தின் பாங்குகளும்
பேறுன மாதா பிதாவவர்க ளாவதுவும்
இருந்து மிறந்தோர்க ளிறந்து மிறவாதார்
மருந்துதவும் பண்டிதத்தின் மார்க்க மனவூக்கஞ்
சுத்த மசுத்தங்கள் தோகைய ரிலட்சணங்கள்
மெத்தப் பெரிதரிது மெல்லியர்தா னங்கொடிது
மிஞ்சுங் கொடுமையினல் மின்னர்க ளாசையினல்
வஞ்சகத்தி னலிறந்தோர் மாறுத பேறுபெற்ருேர்
இத்தகமை யாவதுட னின்னுமின் னும்பலவாய்ச்
சுத்தமுடன் முன்னூலோர் சொன்னபடி யேயுரைத்தேன்
நன்னயஞ்சே ரிந்நூலே ஞாலமெல்லாந் தானறியச்
சொன்னதொரு பாடற் றெகையுமோ ராயிரமாம்
பாடினே னிந்நூலேப் பயனறிந்த வுத்தமர்க்கு
ஈடுண்டோ நல்லறிவுக் கின்னுமொரு நூலுளதோ

### வேதியரொழுக்கம்.

ஆரணங்க ளோதுவதும் யாகாதி செய்வதுவும்
மீறுகா யத்திரியால் வினையெல்லாந் தீர்ப்பதுவும்
நல்ல மிருதிவழி நாளு நடப்பதுவும்
எல்லாத் தவமுமரு ளெய்தும் படிமுடித்தால்
நன்னயமாய் மாரிபெய்து நாடு செழிப்பதுவும்
மன்னர்செங் கோலு மறையோர் மகிமையன்றே

### அரசரொழுக்கம்.

தேசத் தியற்கை தெரிதன் மநுநீதி
வாசற் பிரதானி வாய்மை குறிப்பறிதல்
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தற்காத்தல் சத்திரியமும்
மன்னுங் குடிகளிலே மாறு வடிமானம்

வங்கிஷத்தி லுள்ளோர் மகிமை குறையாமல்
தங்கள் குலத்தைத் தாராதரமாய்க் காப்பதுவும்
கால மிடமறிதல் கனதர்ம சிந்தனைகள்
தாலமிசைக் கீர்த்திப்ர தாபம் பரிமளித்தல்
தேவபக்தி யோடுவளர் சிட்டர்பரி பாலனமும்
மேவலராந் துட்டர்களை விரைந்தடக்கு மாக்கினையும்
மாசங்கள் மீதிலபி மானமது பண்ணுங்கும்
ராசநீ தத்தி னலமென் றுரைத்திடுமாம்

### வர்த்தகரொழுக்கம்.

தானறிந்த வாணிபமுந் தப்பா நிறைவசன
மானவர வாதாயத் ததிகஞ் செலவழியார்
கணக்கி லணுவும்விடார் காரியத்தி லேசெலவும்
இணக்க முடன்செய்வா ரிசைவார்க் கிசைவார்கள்
பொய்யுரையும் பேசார் போற்றிப் பொருள்சேர்ப்பார்
வையகத்தில் மிக்கான வணிகர்குல மார்க்கமதாம்
மறையோர்க்கு மங்களமு மன்னவர்க்கு வல்லபமுங்
குறையாத வர்த்தகர்கள் கொள்வினையும் விற்பனையும்

### வேளாள ரொழுக்கம்.

ஆகமவே தங்கள்தே வாலயம் விளங்குவதும்
மேகம்வரு ஷிப்பதுவும் வேந்தர்கள்செங்கோன்முறையும்
பாரிலே தர்மபரி பாலனங்கள் மேலுமுயர்
சூரவலுவுந் தொழிலாளர் சீவனமுந்
தாளாத கீர்த்தியுடன் றரணியில் வாழ்வெல்லாம்
வேளாளர் தங்களது மேழிப் பெருமையன்றோ

### தருமநீதி.

அறத்திற் பெரிதுமில்லை யதனை யணுவளவும்
மறப்பதுவே கேடன்றி மற்றுமொரு கேடுளதோ
தர்மாதர் மம்மிரண்டுஞ் சதகோடி நாட்செயினும்
அம்மாத் திரமு மனுபவித்துத் தீருமன்றோ
எண்ணும் பலபொருளு மிகத்திற்கு வாராது
புண்ணியபா வமிரண்டும் போவதில்லை தம்மைவிட்டு

பொன்னுடையாபரணம் பூதான மீந்தாலும்
அன்னதா னத்துக் கதிகமுறு தானமுண்டோ
தன்னுற் சுயமாயோர் தர்மந் தொடங்குவதில்
முன்னேர் செய்தர்மத்தை முக்கியஞ்செய் யுத்தமமாம்
பாவபுண் ணியமிரண்டும் பல்லக்கின் கீழ்மேலும்
போவதுவே செய்த புண்ணியமும் பாவமுமாம்
கோணு தணுவளவுங் குறையாது வாழ்வதற்கு
ஆணிவே ரென்பதுவு மறமென்று சோல்லுவதாம்
எண்ணரிய வாழ்வு மெய்தும் பெருந்தவமும்
புண்ணியமொன் றில்லாதேல் புனல்நிறைந்த காடாகும்
ஏதாகி லுந்தர்ம மெவருந்தான் செய்யவென்ருல்
ஏதாகி லுமனதுக் கிசைந்தபடியேகொடுத்தல்
வாக்கு சரீர மதனுற் சகாயங்கள்
ஏற்கவே செய்வோர்க் கிகபரம்வந் தெய்திடுமே
எத்தர்ம மானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திரரு மத்திபமாய்ப் போவார் நரகமதில்
மன்னவர்தம் நீதி மரபிற் பதினுன்கும்
முன்னமேசொன்னே முறைதருமம்பன்மூன்றே

### இராச நீதி.

சேனை குடியுஞ் சினேகமு மந்திரியும்
ஆனபலன் வேளாண்மை யாக விவையாறும்
மிச்சமறி வீகை மேலுந் தயிரியமும்
உச்சாக மென்ப துடனே யிவை நான்கும்
ஓங்காண்மை கல்வி யொழுக்க மிவைமூன்றும்
நீங்காமல் வேணும் நிலனு ளரசருக்கு
யானை குதிரைபடை யன்புடனே யாலயங்கள்
தானதர்ம நீதி தவருமை யிம்மூன்றும்
ஏழைக் கிரங்கியே யெப்பிழைக ளும்பொறுத்தல்
மீளரிய குற்றம் விசாரித்துத் தண்டித்தல்
தக்க மரியாதை தயவுங் குடியினிலே
இக்குணங்க ளெல்லா மிருக்குமந்த ராசாவை

ராசசிங்க மென்பரிவர் நாட்டிற் பசிபிணியும்
மாசு மிலேவறுமை வாராதென் றேயுரைத்தார்
தான்செய்யுந் தர்மந் தனக்காக முன்னோர்க
ளானபேர் தர்மத்தை யபகரித்துக் கொண்டாக்கால்
துன்னடக்கை யென்றுமகா தோஷம்வந்து சூழுமென்று
நின்மலர்தா முன்னே நிகழ்த்தினர் முன்னூலே
ஆலரசு வேம்பிதுமூன் றனதிலே யொவ்வொன்றும்
யேலும் விளாநெல்லி வில்வமதில் மும்மூன்றும்
அன்பாகத் தெங்குமா வையைந்து மாபுளியில்
ஒன்பது மொன்பதிலீ ரொன்பதையும் வைத்தவர்க்குத்
தரணியிலே யெந்நாளும் தக்க புகழ்விளங்கும்
நரகமிவர்க் கில்லேயென்று நவின்றார் மநுநூலில்
அன்னேதந்தை சுற்றங்க ளாதியிலே நம்பினவர்
மின்னுதவி செய்தவர்கள் மிடிமையுற்று வந்தவர்கள்
தக்க பெரியோரைச் சரண மடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள் மேனளிற் சேவகரை
கைநழுவச் செய்யாமற் காப்பாற்று முத்தமர்க்கு
வையகத்தில் வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம்
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தற்காத்த வுத்தமர்க்கு
என்னென்ன பாவமும்போ மிகபரம்வந் தெய்திடுமே
மாமறை யோர்முதலாய் மற்றுமுள்ளோர் தங்களுக்கும்
சேமமுட னெண்ணெய் தேய்ப்பவர்கள் தங்களுக்கும்
மறையோர்க்குந் தொண்டுசெய்து மாதாவைத் தெய்வமெ
கறவைமனே கண்டவுடன் கையாற்சொரிபவர்கள் [ன்போர்
எண்ணுமற் கோடி எக்கியங்கள் செய்தவெகு
புண்ணியம்வந் தெய்துமென்று புகன்றார் மநுநூலில்
துன்மார்க்கர் தன்குடியைச் சுத்தமா கக்கெடுத்து
நன்மார்க்க முள்ளசில நற்குடியைக் காத்திடலாம்
அறக்குடிபத் தானாலு மவர்க டமைக்கெடுத்து
சிறப்புற்ற பட்டணத்தைச் சீர்திருத்திக் காத்திடலாம்
வீடான பட்டணத்தை மிகவுமங் கேகெடுத்து
நாடான தைக்காக்கி னானுமதிற் பாவமில்லே

என்றுமுன்னுள் மாயவனு மேயரவா னைப்பலியாய்க்
கொன்றிடவே பாண்டவர்க்குக் கூறியதிவ் வாறுகும்
தீபமொன்று லட்சந் திரிகொளுத்தி னுலுமந்தத்
தீபங்குறை யாத செய்கைபோ லெந்நாளும்
தலமீதி லோயாமற் றனதர்மஞ் செய்தவர்க்கு
மலர்மாதா வுண்டாகும் வாழ்வதுவுங் குன்றுது
நன்மையே தர்மமத னுலே வரும்வாழ்வு
துன்பம் வருவதில்லை தூயமனை குன்றுது
தின்மைத்தரு மத்தாற் றிகழும் பெருவாழ்வு
நன்மைதர மாட்டாது நாளும்விர்த்தி யாகாது
தருமம் பொருள்கிடைத்த தற்காலஞ் செய்யவென்றும்
அருமைவந்தால் தர்ம மதுசெய்யக் கூடாதே
காய்பழங்கள் பூவிலைகள் கதித்த மரங்களிலே
வாய்வுசென்றுல் நற்கனிகள் மட்டு முதிராமல்
தக்கபழம் காய்பூ தளிர்முதலா வேயுதிரும்
பக்குவம்போற் கெற்பமுதற் பயந்த மனுக்களிலே
சாலக் கிழவர்மட்டுஞ் சாவதன்றி மற்றெவரும்
ஞாலமிசைசாவதில்லை நாளுமென்றிங்கெண்ணவொண்ணு
என்னவய தானுலு மியல்பு வரும்வேளை
நன்னயஞ்சேர் தர்மஞ்செய் நாளிதுவே வுத்தமமாம்
பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றுஞ் சொல்லுவிதம்
இரண்டு மனுபவிப்பா ரெக்கால மானுலும்
நமக்குள் ளதைச்சமைத்து நாமுண்டு வந்தபிறர்
தமக்குங் கொடுக்கின்ற தர்மமே முக்கியமாம்
வாசற் கதவடைத்து வைத்துண்ணு வார்க்குசொக்க
வாசற் கதவும் மாறு தடைத்திருக்கும்
உப்பிலாக் கூழு முளமகிழ்ந்து தான்கொடுத்தால்
ஒப்பிலாப் பால்மிர்தம் ஒக்குமென்றுர் முன்னோர்கள்
பகைவன் கொடுங்கோபி பாலமிர்த மீந்தாலும்
இகவா நஞ் சுக்குநஞ்சாம் எட்டிக்காய்க் கொப்பிடலாம்
ஓட்டைக் குடத்திலிட்ட வுதகம்போ னுற்போலே
நாட்டி லவர்வாழ்வு நாளுக்கு நாள்குறையும்

கூடிவருங் காலம் குறிப்பறிந்து தம்மாலே
கூடுமட்டுந் தர்மங் கொடுத்தாரே யாமாகில்
வாணுளே போகும் வழியடைக்குங் கல்லென்று
கோணுத வாய்மை குறளிலே சொன்னுரே
ஆறி லொருகடமை யரசருக்கா மைந்துபங்கு
சேரும் விருந்துசுற்ற தெய்வம் பிதுர்தமக்காம்
இல்லறத்தில் வாழ்ந்தா லிவ்வாறு செய்யவென்று
வல்லமைசேர் வேதமுறை வள்ளுவருஞ் சொன்னுரே
பாவத்தாற் பொன்தேடிப் பலதருமஞ் செய்தாலு
மேவுற்ற புண்ணியங்க ளெள்ளளவும் வாராதே
தன்மத்தாற் றேடித் தராதரமுங் கண்டறிந்து
தன்மையுடன் வந்தோர் தமக்கு விருந்தளித்து
இன்னம் வருவிருந்துக் கெதிர்பார்த் திருக்கின்ற
நன்னயவான் வீடந்த லட்சுமியின் வீடாகும்
பூமியிலே வித்தேதும் போட்டதே யுண்டானுல்
தாமேதா னைஸ்வரியந் தன்னுலே கூடிவரும்
ஏற்போர்க ளாரேனு மெவ்வேளை வந்தாலும்
கூர்ப்பாகத் தம்மாலே கூடுமட்டு மீந்தாக்கால்
இருந்தாலுஞ் செத்தாலு மெந்நாளுங் கீர்த்தியுண்டாம்
பிறந்தாலு மேலாம் புகழதிக வாழ்வுமுண்டாம்
தர்மங்க ளாவதுதான் தர்மவான் செய்வதெல்லாம்
கர்மிகளுக் கெய்தாதெக் காலமுந்தான் செய்யானும்
எத்தர்ம மானுலு மீகைக் கிணையில்லை
மற்றெல்லாம் பின்னென்று மநுநீ தியிலுரைத்தார்

மாரிச் சிறப்பு.

மண்ணி லுறுதவங்கள் மாதான மற்றுளதும்
விண்ணின்று போனல் விழலாகும் வாரிமுதல்
மாரி வளமு மானிலத்திற் புற்பூடுஞ்
சீர்பெருந் தானதவந் தேவா லயச்சிறப்பும்
மன்னர்முத லானவர்கள் வாழ்வு மவர்தாழ்வும்
மன்னுமுயர் வானமதில் மாரிவள மாமன்றே

## இல்லறம்.

வெல்லறங்கள் செய்துகன வேள்வி முடித்தாலும்
இல்லறத்தின் வாழ்வுக் கிணையாவ தொன்றுமில்லை
மூர்த்தியென்ற மூவருக்கும் முன்னு ளிறந்தவர்க்கும்
பார்த்திபர்க் குந்துறந்தார் பலமுயற்சி யாளருக்கும்
இயல்பினு லில்லா ரிவர்க்குத் துணை யெனவும்
நயமாகு மென்றுகுற ளையனுர் சொல்லினரே
மட்டில்லா வாழ்விருந்தென் மனைதனக்கு முக்கியமாம்
இட்டமுறு மெண்சாதி யென்பவளே முக்கியமாம்
சற்குணமுந் தெய்வபக்தி தர்மசிந்தை கற்புடைமை
இக்குணங்க ளுள்ளா ளிருக்குமந்த வீட்டினிலே
வற்ருது செல்வமவள் வாயால்மழை பெய்யென்று
உத்தரஞ் சொன்னு லுலகமெல்லா மாரிபெய்யும்
தானுமனை யாளுமொரு தர்மமது செய்ய நன்று
தானவர்கள் வேறுபட்ட தர்மமது தர்மமல்ல

## செல்வ நிலையாமை.

நினைத்தபொரு ணீங்கி நினையாப் பொருளெய்து
மனைத்து மதுதானே யப்படியும் வந்துவிடும்
நிலையாகத் தோற்றுகின்ற நிலவதுவும் போயிருளாம்
கனஞ்சே ரிருணிலவாய்க் காணுமே யப்பாலும்
இரவும் பகலாகும் பகலு மிரவாகும்
பெரிதான மேடங்கே பேராறு யாகிவிடும்
ஆறதுவு மேடாகு மழல்நிலத்தி லோடம்வரும்
வாரி சுவறியதில் மணலுமிகச் சூடாகும்
வேண்டு நிதியோர் மெலியோரு மாவார்கள்
மீண்டு மெளியோர்கள் மேலோரு மாவார்கள்
தகமை செறிவாழ்வுந் தாழ்வுஞ் சதமல்ல
சகடுபோற் சுற்றிவருந் தாழ்வதுவும் வாழ்வதுவும்

## தெய்வச் செயல்.

பேராசை யாலே பிரயாசைப் பட்டாலும்
வாராது வாராது வருவதுவும் போகாது

எங்கெங்கே போனாலு மியாவரிடஞ் சென்றாலும்
பங்க முரைத்துப் பலரைமிக நொந்தாலும்
அழுது தொழுதாலும் அனேகநாள் தெய்வத்தைப்
பழுதா யுரைத்தாலும் பயனேது மெய்தாதே
ஆழக் கடலி லமுக்கி முகந்தாலும்
நாழிவரும் நாழியிலே நானாழி நீர்வருமோ
பூர்க்கு மரஞ்செடிகள் பூவாநாட் பூவாது
ஆர்க்கும் விதியையன்றி யாசையினல் வாராது
ஆலிற் புறாவிரண் டங்கிருக்க வோர்வேடன்
சீலமுட னெய்வதற்குச் சிலையிற் கணைதொடுக்க
பாயவந்த ராசாளிப் பட்சியது மேலுலவத்
தூயபுறா வின்மேற் றொடுத்த கணைவிலகி
இராசாளிப் பட்சியுட லானதிலே தைத்துவிழ
பாசமுறு வேடன் பதத்தில் விஷந்தீண்ட
வேடனும்ரா சாளியுமாய் வீழ்ந்து விடவுமொரு
சோடாய்ப் புறாவிரண்டுந் துன்பமற்று வாழ்ந்தனவே
இத்தகைமை யாய்முடியு மீசன் செயலிதற்கு
அத்தாட்சி யாமென் றருளினர் முன்னூலோர்
அண்டரமு துண்ண வரனுமே நஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன் காடுறைந்து கோதை தனைப்பிரிந் [தான்
வேதன் சிரமிழந்து மேனாள் சிறையிருந்தான்
ஆதியிலே யிந்திரனு மங்கமெலாங் கண்ணானான்
சக்ரேச னவரிச் சந்திரனும் பெண்டிரும்
மிக்கதொரு நாடிழந்து விலைப்பட்டுத் துன்பமுற்றார்
மன்னுநள ராசன் மனைவி தனைப்பிரிந்து
தன்னுடைய நாடிழந்து தன்வடிவு குன்றினனே
ஐவ ரடவியுற்றா ராகையா லாரேனும்
வெய்ய விதிதனையே வெல்லவெவ ரால்முடியும்
பூபாரந் தீர்த்த புயல்வண்ணன் வேடன்கை
மாபாணம் பட்டுழன்று வாதைக்குள் ளாகினனும்
ஆனை பறவையுட னரவ மிம்மூன்றும்
சேனை மனிதர்கையிற் சிக்கி மெலிவதும்

நல்ல கதிர்மதிகள் ராகுகேதாற் றுன்புறலும்
வல்லதர்ம வானுக்கு வறுமைவந்து சூழுவதும்
பாக்கியமுள் ளானுக்கோர் பாலகனில் லாததுவும்
போக்கற்ற வேழைக்குப் புத்திரருண் டாவதுவும்
நல்லோர்க்குப் பொல்லாத லண்டிபெண் டாவதுவம்
பொல்லார்க்கு நல்லகுணப் பூவைமனை யாவதுவும்
ஓரொன்ப தொன்பதிது வூழி வினைப்பயனும்
வீரர்க்கு மேலவர்க்கு மின்பதுன் பஞ்சமனும்
ஆகாச் செயலுக்கு மயலார் பொருள்தனக்கும்
வாகாக வாசைமிக வைத்தால் வருவதில்லை
வாழ்வதுவுந் தாழ்வதுவும் வருவதுவும் போவதுவும்
ஊழ்வினையின் வாறன்றி யுத்திபுத்தி யாலாமோ
ஞாலமிசை வந்துபோம் நன்மையுந் தீமையுமே
ஏலவே பின்னுமுன்னு மிவையிரண்டு மனுபவிப்பார்
காலித் திரளிலொரு கன்றுன தைவிடுத்தால்
பாலிதத்தை யீன்ற பசுவறிந்து சேருதல்போல்
ஓடியொளித் தாலுமங் குற்ற பழவினைதான்
தேடிப் பிடிக்குமென்று செப்பினர் முன்னோர்கள்
எக்காலஞ் சென்றாலு மிறவாத பேரில்லை
மிக்க வருங்கூற்றை வெல்பவர்க ளாருமில்லை

### சுக போஜனம்.

தாளாண்மை யென்னுந் தகைமைதனைச் சீர்தூக்கில்
வேளாண்மை தானுலகில் மேன்மையென்று சொல்லினரே
வேந்தர் தமையடுத்தோர் வேளாண்மை செய்பவர்கள்
சார்ந்த வனமலைகள் தன்னருகில் சஞ்சரிப்போர்
மருவாருஞ் சந்தன மரவனத்திற் சமுத்திரத்தி
னருகே யிருப்பவர்க ளாவின்பா லுள்ளவர்கள்
சகடுடைய ரரைக்கீரை தன்னைப் பயிரிடுவோர்
மிகவுமிந்த வெண்மருக்கு மேலான பஞ்சமில்லை

### நற்சகோதரர் துற்சகோதரர்

தம்பியர்மே லன்புடையோர் தர்ம ரகுராமர்
தம்பிமேல் சத்ராதி தசக்கிரீவன் வாலியுமாம்

நற்றுணையாந் தம்பியர்கள் லட்சும ணன்பரதன்
உற்றதொரு தர்ம ருடன்பிறந்த நால்வர்களாம்
சுக்ரீவ னுனவனுஞ் சுயோதனன் விபீஷணனும்
தக்கபுகழ் பூவுலகில் தமையனுக்குச் சத்ராதி
பண்பா வுடன்பிறப்பிற் பகையுறவி தாகுமென்று
முன்பாக நீதிநூல் முறையி லுரைத்தனரே

அரசிற் புகழ்பெற்றோர்.

மனுவிட் சுவாகுவுடன் வாகான அம்பரீஷன்
கனதைபெறு மாந்தாதா கார்த்திகார்ச் சுனன்பரதன்
விருத்தச் சிபியுடனே விந்துசசி விந்துவுடன்
மருத்துப் பகீரதனும் வாணன்முசு குந்தனுடன்
திராப் புகழ்யாதி தேவேந் திரனுடனே
பாரிற் றசரதனும் பாண்டவர்க ளைவர்களும்
சத்யவரிச் சந்த்ரனுடன் தாதை திரிசங்கு
உற்ற நளன்விதுர னேங்கு புரூரவனும்
அந்நாளி லேபிரக லாதனுடன் மாபெலியு
மன்னுஞ் சடாயுகுகன் வாகாம் விபீஷணனும்
ஆறைந்து பேரு மதிகபூ சாபலராய்ப்
பாரிற் புகழ்நிறுத்திப் பரமபத முற்றவராம்
ஏற்கை பெறுந்திரளி லெழில்விஸ்வா மித்ரமுனி
மார்க்கண்ட னூர்பரத்து வாசருயர் வான்மீகி
வின்னமிலா வள்ளுவரும் வியாசருடன் கண்ணப்பன்
தன்னு லெழுவர்களுந் தானவராய்ப் பேறுபெற்றார்

நல்லறிவு.

தீயினாற் சுட்டபுண் தீருஞ் சிலமருந்தில்
வாயினாற் சுட்ட வடுவொன்று மாறாதே
ஏற்கை யுடன்புகழோ டெய்தாத சென்மமவன்
தீர்க்கமுட னேமறுத்துஞ் ஜென்மமெடுக் காமை நன்றாம்
மண்ணிற் பிறப்பதெல்லா மாரியது வேகாட்டுந்
தண்ணமுள வாய்ச்சொல்லாற் சாதி யறிந்திடலாம்
சிறியோ ரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ் செய்யாத
பெரியோர் தமையடுத்தாற் பேதமொன்றும் வாராதே

துய்யகிர கம்நித்ய சோபனத்தி னல்விளங்கும்
வையகத்து ராசாக்கள் மனுநீதி யார்கெலிப்பார்
நாரியர்கள் சற்குணத்தி னலே விளங்குவர்கள்
கூறும் விதரண னுங் கொடையால் விளங்குவனும்
பாரிலெந் நாளும் பகல்விளக்கு மாவிரவி
காரிருளைத் தான்விளக்குங் காந்தி யுறுமதியம்
பதிவிளங்கும் பொன்னலே பார்விளங்கும் மேகமதால்
சதுரப் படைவிளங்குந் தங்கள் புயவலியால்
குடிகள் விளங்குவது கொற்றவர்க ளால்நீதி
நெடிய தவம்விளங்கும் நெஞ்சிலுற்ற நல்லறிவால்
புகழாற் கொடைவிளங்கும் போசனத்தா லுயிர்விளங்கும்
புகலரிய நன்னூலாற் புத்திமிக வேவிளங்கும்
சொந்தமென்று துற்சனரைத் தோழமைகள் செய்யவொ
சந்தேக முற்றதொரு தையலரைச் சேரவொண்ண[ண்ணுச்
சார்பில்லார்க் கில்லைநிலை தயவிலார்க் காக்கமில்லை
ஊரில்லார்க் கரசுமில்லை ஊணில்லார்க் குறுதியில்லை
மாடில்லா தார்க்குந்த வையகத்தில் வாழ்வுமில்லை
கூடுமுத லில்லார்க்குக் கொள்ளல்விற்ற லிலாபமில்லை
துற்சனற்கு நேசமில்லை சுகமில்லார்க் காசையில்லை
இச்சகத்தி னன்மைதனக் கென்று மழிவுமில்லை
மனதின் குறிப்பை வதனத் தறிந்திடலாம்
அனைய குண நடத்தை யதனு லறிந்திடலாம்
சமர்முகத்திற் சூரன்வலு தன்னை யறிந்திடலாம்
தமர்சேரும் வன்பிணியைத் தாதா லறிந்திடலாம்
கல்விப்பிர சங்கத்திற் காணலாங் கவிஞர்திறம்
சொல்வண்மை யாற்சாதி தோற்ற மறிந்திடலாம்
மாநிலத்திற் பூண்டுகளை மழையா லறிந்திடலாம்
தானநல்லார் பொல்லாரைச் சந்ததியால் கண்டிடலாம்
கண்ணிரண்டா மியாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுகண்ணும்
எண்ணுந் தியாகிகளுக் கேழுகண் ணுகுமல்லோ
மனங்குவிந்து ஞான மகிமை யறிந்தவர்க்கு
அனேகங்கண் ணுகுமென் றருளினர் முன்னோர்கள்

தர்மவான் றன்னிடத்திற் றங்காது பாவமுந்தான்
கர்மிதுன் மார்க்கரிடங் கனத்ததர்ம நில்லாது
நெருப்புக்கு முன்னிருளு நில்லாது தான்மிகுந்த
கருத்த விருள்மணியுங் கதிரோன்முன் னில்லாது
சத்தியத்தை தானு மசத்தியமும் வெல்லாது
பொத்தி யெழுங்கோபம் பொறுமைதனை வெல்லாது
புண்ணியத்தைப் பாவமொரு போதுமே வெல்லாது
மண்ணில் விஷங்கெருட மந்திரமுன் னில்லாது
சந்தனங்கஸ் தூரி தாம்பூல மாடைமுதல்
விந்தைசே ராபரணம் மிகவுமெவ ரீந்தாலும்
ஏற்போ ரொருகையா லேற்ருரே யாமாகில்
கூர்ப்பாய்க் கோடுப்பவர்க்குக் குறையாத வாயுசுண்டாம்
செகமுழுமை யுந்தானே தேவாதி னம்மாகும்
மகமான தெய்வமது மந்திரா தீனமாம்
மந்திர மானதுவே மாமறையோ ராதீனம்
சந்ததஞ் சேர்மறையோர் சகலருக்குந் தெய்வமென்பார்
பாலன்ன மானாலும் பண்பில்லாக் கூழெனிலும்
மேல்சுத்த மாய்க்கால மிகவறிந் துண்ணனன்று
நல்லோருக் குற்றதுயர் நன்மைசற்று மில்லாத
பொல்லாதான் வாய்வுமொரு போதுநிற்க மாட்டாதே
பாம்புகடுநெருப்பிற் பற்றீப் பிழைப்பிப்போர்
மேம்பாடு தப்புமென்று விண்டார் மனுநூலோர்
ஊமைக்குத் தோன்ற உபாயங்கள் சொல்லுவதுங்
காமிக்கு ஞானக் கதையெடுத்துச் சாற்றுவதும்
துட்டனுக் கெத்தனையோ சொல்லிநன்மை செய்ததுவும்
முட்டாளுக் குண்மை நித முறையாகச் சொல்வதுவும்
இன்பக் கவிகடனை ஈயார்மேற் பாடுவதும்
அன்பில்லாச் சோரஸ்திரீ யாசையால் மெலிவதுவும்
நலத்தைக் கொடுப்பதில்லை நன்ருகா திவ்வாறும்
மலைக்கல்லி லேயெறிந்த மண்பாண்ட மாகுமல்லோ
ஐந்தான பாவத்தி லான்று விரண்டுநலம்
ஐந்திலே மூன்றை யவ்வைசொன்னு ளாகாதாம்

தெய்வத்தா லாவ தெனினு முயற்சியிலே
மெய்வருந்தக் கூலிவரு மெய்மைசொன்னார் முன்னூலோர்
இத்தனை நாள் நம்வீட்டி லேற்றும்விளக் கென்றணுகி
முத்தமிட்டாற் கன்ன முடையெழுப்பச் சுட்டுவிடும்
உற்றகுல தெய்வ நமக் கொன்றுசெய்யா தென்றுபொய்யாச்
சத்தியம் பண்ணினுற் றன்னைவிட மாட்டாது
தூங்குவது போலுந் தூங்கி விழிக்கின்ற
பாங்கதுவு மாமிந்தப் பாரிற் பிறப்பிறப்பு
கூட்டினுள் ளேயிருந்து குருவி பறப்பதுபோல்
தேட்டமுட னிவ்வுடலிற் சீவனிருந் தேகுசெயல்

கொல்லாமை.

கொலையென்று நெஞ்சிற் குறியாதான் வாணுள்மேல்
மலையா யுயிருண்ணு மறலிவர மாட்டேனே
நல்லோர் பெரியோர்க்கு நாயகமே யாவரெனில்
கொல்லாமை யென்பதனைக் குறித்தறிந்த உத்தமராம்
தானு பதிதாதன் தந்தைதாய் சற்குருவு
மானர் மனையாட்டி மறையோர் புராணிகரை
சுத்தமுள்ள வீரர் துலங்கு கவிவாணர்
உற்ற தபோதனர்க ளுயர்குலத்தோர் பாவலர்கள்
சால விகடன்பிர சங்கி பிணியாளர்
ஞால மிசைவறிஞர் நவின்றபதி னெண்மரையும்
எப்பிழைகள் செய்தாலு மிராஜன்முத லானவர்கள்
சர்ப்பனையுந் தண்டனையுந் தான்செய்ய லாகாதே

கோநேரகடைவோர்.

நீதியுள்ள ராஜர்களை நீதிவழக் குரைப்போரை
ஆதிகுரு வானவரை யவருடைய சீஷரையும்
சோதிடஞ்சொல் வேதியரைத் துன்பங்கள் தீர்த்தவரை
யோதரிய பண்டிதரிவ் வோரெழுவர் தங்களுக்கும்
தீதான வஞ்சகங்கள் செய்தாரே யாமாகில்
தீதாய்க் கொடுநரகிற் சேர்வார்கள் திண்ணமிதே
அன்ன மளித்தவருக் கவகேடு செய்தவர்கள்
மன்னர் தமையடக்கி வைத்த வமைச்சர்களும்

நன்றி மறந்தவரும் ராசாக்க ளூச்சமரில்
ஒண்டியாய் விட்டே யொளித்தோடிப் போனவரும்
மாதா பிதாகுருவை வசையாய்நிந் தித்தவரும்
வேதாந்த மாதவத்தோர் மெய்நோக வைதவரும்
தெய்வ மிகழ்ந்தவரும் சின்னத் தனத்தவரும்
பொய்சொல்வோ ரன்னியர்தம் பொருட்காசைபட்டவரும்
பாரில் விசுவாச பாதகமே செய்தவரும்
ஏருண்ட வீட்டுக் கிரண்டகங்கள் செய்தவரும்
பன்னிருவர் தாமும் பரிதிமதி யுள்ளளவும்
நன்னயமில் லாத நரகிற் குடியிருப்பார்
சோதிடஞ்சொல் வோருந் தொடுவழக்குத் தீர்ப்போரும்
பேதமில்லாப் பண்டிதரும் பிராயச்சித் தம்விதிப்போர்
நீதியுரை யாமல் நின்றோரஞ் சொல்வாரேல்
ஆதின மும்பாழாம் ஆழ்நரகத் தெய்திடுவார்
பார்க்கும் மலைகட்லின் பாரமது பாரமல்ல
பார்க்கும் விசுவாச பாதகனே பாரமென்பார்
கற்றது ரோகிவஞ்சன் காணு மிவரிருவ
ருற்ற சுமையேயென் றுலகத்தா யஞ்சுவளாம்
அக்கினியி லேயமிழ்ந்தோ ராறுபே ராமிவர்க்கு
மிக்க தொருகொடிய வியாதிவரும் பின்னரகம்
தண்ணீரி லம்மணமாய்த தான்போவோ ரதிற்புணர்ந்தோர்
உண்ணீரி லேயுமிழ்ந்தோ ருறுமலமும் நீருவிட்டோர்
அசுத்த முடனேதா னுலயத்திற் செல்வோர்கள்
நிசமாகச் சந்திபி னேரரய்க் குடியிருப்போர்
போற்றுகின்ற தேவதையின் பூசைக் கெனக்கொணர்ந்து
சாற்றுத புட்பந் தனையெடுத்துச் சூடினவர்
திராப் பிணியடைந்து செகத்திலிவ ரெழுவர்களும்
மாறு வறுமையுமாய் வன்னரகஞ் சேர்வார்கள்
மேல்குலத்துக் கீழ்குலத்து மின்னு ருடன்பிறந்தோர்
ஆகுலமுண் டாக வழிப்பர்குல விர்த்தியற்றுக்
கண்காதுக் கெட்டாத கடும்பிழைகள் சொன்னவர்கள்
மண்மேல் குலத்தோடு வன்னரகஞ் சேர்வார்கள்

கெடுமதியா லடுத்தவர்க்குக் கேடு நினைத்தவர்கள்
குடும்பமுமே நாசமாய்க் கொடுநரகஞ் சேர்வார்கள்
மன்னர் நிருப மதியாது தள்ளிவிட்டோர்
அன்னைதந்தை சுற்றத் தவர்கள் தமையடிப்போர்
எளியவர்க டம்மோ டிகல்புரியும் வஞ்சகர்கள்
பழியாளர் கோளர் பழிபுகல்வ ரெண்மரையும்
மண்டலத்தில்மூ ன்றுபிழை மட்டும் பொறுத்தப்பாற்
றெண்டனைகள் செய்வதுவே தேசமன்னர் நீதியதாம்
உரியவிவ காரம்வந்தா லுற்றூர் பகைவரென்றும்
பரிதாப மெய்துசம் பந்தரிவ ரேழையென்றும்
பாராமல் நீதியாய்ப் பாங்காய் விசாரித்து
கூராய்ச் சமன்செய்த கோல்போ லிருதலையும்
நிறையா நிறுத்தவர்க்கு நீடூழி காலம்வரைக்
குறையாமல் வாழ்வுண்டாங் குலமுமிக விர்த்தியுண்டாம்

துஷ்டநிக்கிரகம்.

சாதி முறைவறுஞ் சண்டாளர் கற்புடைய
மாதை விரும்புவர்விஸ் வாசமில்லாப் பாதகர்கள்
கோள்சுள் மிகுந்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும் பகையாளர் நாசத்து ரோகிகளும்
ஏழை தமையடித்தோ ரிகல்விளையுஞ் சண்டைசெய்வோர்
சூழும் பிணிகளொடு துஷ்டமிரு கந்தீயர்
கொன்றாலு ந் தீராத கோபர் பதினறுவர்
அன்றடக்கி னல்லா லதிகரித்தால் வெல்லரிதே
துற்சனரும் பொன்னுந் துரகதமுந் தோற்கருவி
மிச்ச முறுநரம்பு வெண்கலமா முக்கருவி
மானமில் லாமுனிக்கு மானு ரவர்களையும்
ஈனமில் லாக்கரும்பு மெள்ளுடனே யீரைந்தும்
தெண்டித்தார்க் கெல்லாஞ் செயங்கொடுக்குமென்றிவற்றை
பண்டுவட நூலிற் பகர்ந்தாரே முன்னோர்கள்
தந்தைதா யானாலு தன்குலமெல் லாம்விளக்கும்
மைந்தனே யானாலு மனையாட்டி யானாலும்

மந்திரியே யானாலும் மரபுள்ளளோ ரானாலும்
பந்த முடனமக்குப் பகையாளி யென்றறிந்தால்
அன்றே யகற்றிடினு மாக்கினைகள் செய்திடினும்
கொன்றாலும் பாவங் கொலையுமில்லை யென்றனரே
தோழமையாம் வஞ்சகரைச் சோற்கேளா மைந்தர்களை
மீளாச் சமர்முகத்தில் விட்டோடுஞ் சேவகரை
மன்னவர்க்கு வஞ்சகஞ்செய் மந்திரியோ டிவ்வவறுவர்
தன்னைக் கொடுந்தண்டஞ் சதியுமிகச் செய்திடலாம்

நல்லறிவு

பூமிக் கரசர்தெய்வம் புருஷனே பெண்கள் தெய்வம்
காமிக்கு மாதர்தெய்வங் காசுபணம் லோபிதெய்வம்
தாரித் திரனுக்குத் தனங்கொடுப்போர் தெய்வமிந்தத்
தாரணியில் துஷடருக்குச் சவுக்கடியே தெய்வமென்பார்
நீதியுடை யோனுக்கு நேயரே தெய்வமதாம்
ஆதி பராபரமே யனைவோர்க்குந் தெய்வமதாம்
அன்னைதந்தை சுற்றத்தை யடர்ந்து முனியவொண்ணு
பின்னொன்று முன்னொன்று பேசித் திரியவொண்ணு
வஞ்சகரை நம்பவொண்ணு வாக்கிரண்டு பேசவொண்ணு
தஞ்சப் பொறுமையிலாச் சண்டையினிற்போகவொண்ணு
வேணவித்தை கற்றாலு மேதினியி லேவிளங்க
ஆணவமாய்க் கொஞ்ச மாடம் பரம்வேணும்
நீடு நதிகண்மிக நீந்த வறிந்தாலும்
ஓடந் தனையகற்றி யுதகத்திற் சொல்லவொண்ணு
ஞான மறிந்தாலு நாடொப் பனசெய்து
வானவர்போ லேநடந்து மகிமை பெறவேணுஞ்
செம்பொற் குபேரனெனுஞ் சீவனத்தி லேமுயற்சி
பண்புடனே எந்நாளும் பண்ணு திருக்கவொண்ணு
வாசமுட னேவெகுவாய் வல்லமையுண் டாயிடினும்
ராசாக்கள் சேவை நலம்பெறவே வேணுமல்லோ
உரித்தான புத்திமதி யூகியே யானாலும்
பெரியோர்கள் சொற்கேட்டுப் பின்சென் றிருக்கநன்று

பெற்றபிள்ளை தான்மூடப் பிள்ளையே யானாலும்
சற்றுகி லுங்கல்வி தான்வரவு செய்யநன்றாம்
மெலிவாங் யேயதிஷ்ட மில்லா திருந்தாலும்
சலியாம லேமுயற்சி தன்னைவிட வொண்ணாதே
தீராத ரோகமதால் தேகமெலி வுற்றாலும்
வீரா ரவிழ்தத்தை விட்டுவிட லாகாதே
தனியே பொருள்தேடித் தனித்துண் ணும் பாற்சோற்றி
லனையார் கிளையோடே யன்றுண்ட கூழதிகம்
ஏதோர் மருங்கு மில்லா ரிடத்தினிலே
பேதைகளாய்ச் சேவித்துப் பெரும்பொருள்கள் வாங்குவதி
மானமரி யாதையுடன் வையகத்தில் நல்லோராய்த் [ல்
தானுள்ள பேர்கொடுக்குந் தாம்பூல மேயதிகம்
வீணிற் பலவித்தை மெத்த விரும்புதலி
லாணியாம் வித்தையொன் றதுகற்றாற் போதுமல்லோ
சின்ன முயல்மான்கள் சிற்சில வெல்லுவதில்
உன்னும்புலிக் குட்டி யொன்றுவென்றாற் கீர்த்தியுண்டாம்
அவிவேகி யுடன்வெகுவா யான வுறவதிலும்
விவேகி பகையிருந்தால் மெத்தவது நன்றாகும்
தன்னுயிர்க்கு வந்தலயந் தப்புவிக்க வேண்டுதற்கும்
பின்னும் பிறருயிரைப் பேணிவிட வேண்டுதற்கும்
மையல்கொண்ட மாதருக்கும் வழுத்திலிது மூன்றினுக்கும்
பொய்யுரைத்தால் பாவமொரு போதுமில்லை யென்றனரே
பின்னால் வெகுபொருளைப் பேரர் யளிப்பதிலும்
இந்நாள் தருணத்தில் ஈய்ந்தவரைக் காசுநன்றாம்
நாளையென்றும் பின்னையென்றும் நாட்கெடுவு சொல்லுவ
வேளையிது வல்லபோ வென்றால் மிகவுநன்று (தில்
தெளிவான கல்விகற்றால் தேசம் வசியமதாம்
பழியா மரியாதை பாவலர்கள் தான்வசியம்
சித்தமதிற் பத்தியே தெய்வ வசியமதாம்
உற்றபெருஞ்செல்வ முறவோர்கள் தாம்வசியம்
வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுபத்துக் காத்திருந்தா லரசர் வசியமுண்டாம்

சாந்த மொழுக்கஞ் சகல ஜனவசியம்
வாழ்ந்தகமு நல்ல மனையாளுக் கேவசியம்
கூடியே வாழ்ந்தாலும் குழந்தைமிகப் பெற்றாலும்
தேடிப் பிதிர்களுக்குத் தெய்வத்துக் கிட்டாலும்
தானதர்மஞ் செய்தாலுந் தாழ்ந்தவர்க்குச் சொன்னாலும்
மானமுள நல்லோர்க்கு வணங்கி நடந்தாலும்
செய்த பிழைபொறுத்துத் தேசமதில் வாழ்பவர்க்கு
துய்ய வயித்தியர்கள் சோதிடர்கள் தங்களிட
மருங்காயெவையுமங்கே வைத்து வணங்கநன்றாம்
வெறுங்கையாற் போனால் விழலாங் கருமமெல்லாம்
பாரி லொருதாயார் பலபிள்ளை பெற்றாலும்
சீரு மழகுந் திறங்குணமும் வெவ்வேறாம்
பயிரிடுவோர் தங்களுக்குப் பாரில் வறுமையில்லை
தயிரிய முள்ளவர்க்குத் தாமோர் பயமுமில்லை
உற்றசெபஞ் செய்வோருக் கொன்றும் பயமில்லை
நித்திரையில் வீழ்ந்தார்க்கு நேரும் பயமில்லை
தன்னவ னுயிருந்து தப்பிதங்கள் செய்தாக்கால்
அன்னியனு மென்றெண்ணி யன்றே யகற்றநலம்
அன்னிய னுயிருந்து மன்புள்ளோ னுனக்கால்
தன்னவனு மென்றவனைத் தாபரித்துக் கொள்ளநலம்
நல்லோர்க்கு முன்னுளோர் நன்மைசெய் தாலதற்குப்
பொல்லா வொருநூறு பிழையும் பொறுப்பார்கள்
அற்பர்க் கெழுநூ றதிகநன்மை செய்தாலும்
சொற்ப வொருபிழைதான் தோன்றிற் பொறுக்காராம்
செய்த தவத்தளவே செல்வமது வுண்டாகும்
எய்துங் குலத்தளவே யிருக்கு மவர்கள்குணம்
கற்றோர் நலஞ்சிறந்த கன்னியர்க ளன்புடையோர்
நற்றவங்க ளுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்
சாதிவரம் பெண்ணாது சார்ந்திருக்க வேண்டுமதே
நீதிமுறை யென்றுமநு நீதிநூ லோதிடுமாம்

இன்பக் கவிமூட ரிடத்திற் படித்தாக்கால்
அன்பில்லைச் சற்று மதற்கும் பழுதுசொல்வார்
கற்றோ ரருமைதனைக் கற்றோ ரறிவதல்லாற்
சுத்த மலடிபிர சூதி யறிவாளோ
பஞ்சரித்து வேண பரிசு பெறுவதிலு
மின்சொல்லாற் பிச்சை யெடுத்துண்ண நன்றாகும்
வீம்பான சத்ராதி மெய்யென் றிருப்பதிலும்
பாம்போ டுறவுமிகப் பண்ணுவதே நன்றெனலாம்
கண்ணென் றுரைப்பதிரு கண்ணதுவுங் கண்ணல்ல
எண்ணென்ப தேனை யெழுத்தென் பதுவேகண்
கைப்பொருளே பொய்ப்பொருளாங் காவலே வேண்டாத
மெய்ப்பொருளாந் தான்கற்ற வித்தைநீங் காப்பொருளாம்
வாழ்வுமிக வந்திடினும் வம்மிசத்தின் மார்க்கம்போல்
தாழ்ந்து நடப்பவர்க்குத் தாழ்வுசற்றும் வாராதே
யானை தனதென் றடாது செய்யப் போகாது
தீனு னைதமிகுந்து தின்றாலுங் கேடெய்தும்
ராச ருரியரென்று நடத்தை பொருதசெய்தால்
ஆசார மேன்மையும்போ யவதியுமவந் தெய்திடுமே
இல்லாரை யுள்ளவர்க ளேகி யிழுக்குரைத்தால்
நல்லதல்ல நஷ்டநயம் ராட்டினம்போற் சுற்றிவரும்
தேசமதி லேழைபர தேசிமறை வேதியரை
ராசர்கா வாவிட்டா னன்றல்ல பாவமுமாம்
சாகா வரம்பெற்ற தவர்க்குப் பயமில்லை
வாகாகப் பேசாத மௌனிக்குச் சண்டையில்லை
வித்தைகற்றால் தந்தையை மேதினியெல் லாம்புகழும்
கற்றதொரு வித்தையது கற்பகத்துக் கொப்பாகும்
மெத்த வழகுடையோர் மேற்குலமே யானாலும்
வித்தையொன்றில் லாவிட்டால் விரையில்லாப் பூவாகும்
திருந்து மயிர்நகமுந் தேசமன்னர் பல்நான்கும்
இருந்த விடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை
மின்னாருந் தாசி வேதியர்நாய் கோழியுடன்
தன்மைசேர் பண்டிதர்கள் சார்ந்தொத்து வாழார்கள்

ஓங்கும் பொருட்சேத முயிர்ச்சேதம் வந்தணுகில்
சங்க முடன்சிரித்தாற் றயிரியமும் வந்திடுமாம்
தர்மசிந்தை யுள்ளோர்க்குந் தயாள புருடருக்கும்
எம்மாத் திரப்பொருளு மில்லாளு மோர் துரும்பு
வீரமிகு சூரனுக்கு மேலவர்சே னை துரும்பு
பாரிற் றுறவிகட்குப் பார்த்திபனு மோர் துரும்பு
பெரியோருக் கற்பர்கைப் பிரயோச னம்துரும்பு
அரியகலை வாணியரு ளடைந்தாற் கவி துரும்பு
நூற்றிலொரு சேவகனும் நூற்றுப்பத் தாயிரத்தில்
பார்த்தா லொருவன் பாவாண னென்பவனும்
பாங்கான வார்த்தைசொல்வோன் பதினுயி ரத்தொருவன்
எங்காக் கொடையாளி யிலட்சத்தி லேயொருவன்
சினமென்ப தென்னுமொரு சிக்கா மதையறுத்தால்
மனமென்ப தெண்ணமுற்ற வாறே முடித்திடலாம்
அரிதான மாதவங்க ளனேமாய்ச் செய்தாலும்
பொறுமையென்ப தில்லாதேற் போமே விழலாக
எத்தாம மானுலு மெண்ணித் துணிதனன் று
மெத்தத் துணிந்தபின்னர் மேமெலெண்ணி னுலிழுக்காம்
பட்சிக் கரசுபலம் பாலர்க் கழுகைபலம்
மச்சத்துக் கேசலமாம் மன்னர்க்கு வேல்பலமாம்
வாகனங்கள் தானுடையான் வழிநடைக் கஞ்சானும்
மாகறவைப் பாலுடையான் வருவிருந்துக் கஞ்சானும்
வத்திரமுள் ளான்சபையில் வரப்போக வஞ்சானும்
உற்றபணக் கார னென்றுக்கு மஞ்சானும்
மானிற் கவரி மயிர்தடுத்தா லேகாது
மானபர னவ்வாருய் வசைய ணுவுங் கேளானும்
மேஷந் தனக்கு மிரண்டுசெவி யுமறுத்து
மாசுபடத் தேக மயிர்முழுதை யுங்களைந்து
சூடுசூட்டி யும்பின்னே தொடர்ந்துவரு மாறதுபோல்
கேடு கெட்ட மர்ந்தரவ கீர்த்திகளுக் கஞ்சாரே
மச்சுவீ டாலநிழல் மானுர் தனக்கோடு
நிச்சய மாய்க்கிணற்று நீரு மிவைநன்கும்

கட்டாகச் சீதள காலத்தி லூஷ்ணமதாய்
திட்டமுட னுஷ்ணத்திற் சீதளமு மாகுமல்லோ
சாதித் தொழில்செய்வார் தனக்குக் கெடுதியில்லை
ஆதவனர் கால மறிந்துசெபஞ் செய்பவர்க்கு
ஏதேதும் பாவங்க ளில்லையொரு நாளுமென்றும்
நீதிமனு நூலி னிகழ்த்தினர் முன்னோர்கள்
பெண்ணைத்தரி சித்த பின்போகஞ் சம்பவிக்கும்
வண்ணமல ரைச்சேர்ந்தால் வாசமது சம்பவிக்கும்
பெரியோரைச் சேர்ந்தவர்க்கு பெருமைமிக வுண்டாகுஞ்
சிறிதான துற்சனரைச் சேர்ந்தவர்க்குக் கேடுவரும்
விண்ணதனி லேயிருந்து வீழு மழைத்துளிதான்
மண்ணிற் சுடுமிரும்பில் வந்துவிழு முன்சுவறும்
தாமரையில் வீழ்ந்தாற் றுழா துயராது
சேமத் திரைகடலின் சிப்பியிலே வீழ்ந்தாக்கால்
விலைமதிக்க வொண்ணாத வெண்முத் தையினும்
தலைமீதி லிவ்வாறு சற்பாத் திரமறிந்து
கொடுப்பதே தர்மமிந்தக் கூறறிந்து செய்யாவிட்டால்
விடுப்பான் கொடுப்பதெல்லாம் வீணாகு மென்றனரே
காரிருளில் மரத்தடியிற் கண்ட பழுதைதனைச்
சீருமுயர் பாம்பென்று செப்புவார் தப்பாமல்
உத்தமர்கள் தாசிவீட் டோரமாய்ப் போனாலும்
சத்தியமா யுத்தமரைச் சமுசயமாய்ச் சொல்வார்கள்
வீணாகப் போகா விடந்தனிலே போகவொண்ணா
தோணாமற் போனாக்காற் றுன்பம்வரும் பின்னிழுக்காம்
தேசிவந் தாற்பசுவைத் தேடா ரதிமோகத்
தாசிவந் தாற்பசுவைத் தாரமதைத் தேடார்கள்
ஆசையா லெப்பொருளும் அபகரிக்க வேண்டுவர்க்கு
ரோஷமில்லை கேடுகெட்ட லுத்தரிலும் லுத்தர்களாம்
அன்னைபிதா மூத்தோ னாசா னரசனுடன்
பின்னைப் பெரியோர்கள் பிராண சிநேகிதர்கள்
ஆக வெழுவர்களு மழையா திருந்தாலும்
போகலா மேவலியப் பிழையொன்று மீனமில்லை

அலைகானஞ் செல்லநன் றல்லாது தான்தரித்த
கலைகிழித்துக் காவியிட்டுக் கௌபீனங் கட்டனன்று
ஓடெடுத்து வாங்கியே யுண்ணநன்றி யாவர்களும்
நாடாளவ னத்திற்போய் நாடுவதும் நன்றாகும்
ஈயாத லோபியிட மேறும் புலவருக்கு
ஞாயமிது வென்று நவின்றாரே முன்னூலோர்
வெள்ளாட்டி யானவளை விரகத்தி னலணைந்தால்
உள்ள குலமும்போ யொழுக்கமெல்லாங் கெட்டுவிடும்
வேசையரைச் சேர்ந்தாக்கால் வெட்கமில்லைப்பொன்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச் சேர்ந்தாக்கால்
ஆயுசுமே தான்குறையு மகல்வா ளிலட்சுமியும்
தூயபிறர் தாரத்தைச் சோரத்திற் சேர்ந்தாக்கால்
அன்னரகஞ் சேர்வரிவை யாகாது நாலுமென்று
முன்னோர் வடநூலிற் முறையா யுரைத்தனரே
செல்லுமிட மானாலுஞ் செல்லா விடத்தினிலும்
பொல்லாத கோபமொரு போதும்வைக்க லாகாதே
இன்னவகை யின்னுறு லெய்துமெய் தாதெனவே
தன்னி லறிந்துசெய்யா தாராகி னஷ்டம்வரும்
கள்ளுண்டா லுற்ற காரணமெல் லாம்வெளியாம்
கொள்ளை விரும்பிற் கொலைகள்வந்து நேரிடுமே
சூதாடி னிம்மையிலே துன்பம்வரு மல்லாது
சேதார மாகுந் திரவியங்க ளுள்ளதெல்லாம்
ஆகாய வீதிக்கு ஆதித்தன் ரத்தினமாம்
வாகன கல்விகற்றோன் மகாசபைக்கு ரத்தினமாம்
சயனந் தனக்குரத்னஞ் சார்ந்தவழ குள்ளபெண்கள்
நயமான வீடதற்கு ரத்தினஞ்சற் புத்திரராம்
எமனை வென்றுசய மேற்பவரே யானாலும்
மேன்மை செறிபெரியோர் வெம்பகையொன் றாகாது
ஆருந் திருமா தனுக்கிரக முள்ளளவும்
பாருக்கு ளெந்தப் பகையு நெருங்காது
கூடாத காலங் குறுகி வருங்காலம்
வீடா னதிலிருந்தும் வினைவிளையுந் தன்னாலே

தாரித் திரர்பசியைத் தாங்குவதே மிக்ககொடை
ஏற்ற பணக்காரர்க் கீவதுவே வட்டியுமாம்
எளியோ ருடனெதிர்த்தே யெண்ணமல் வைவதிலும்
விழிகாணு தோடென்று விரட்டுவதே நன்ருகும்
அன்பில்லா தாரிடத்தி லதிக வரவதிலும்
பின்பு மவருடைய பெருத்த பகைநலமாம்
வேண்டாப்பெண் டிரை வீணுவைத் தேசுவதில்
வேண்டாம்நீ யென்று விரட்டிவிட லுத்தமமாம்
சாலவே வாழ்வுடையோர் சாவதற் கஞ்சுவராம்
சால வறுமையுற்ருேர் சாவதற் கஞ்சாராம்
பாரிலே யீகையுள்ளோன் பாக்கியமெவ் வாறென்னில்
பேராரும் பூர்வபட்சப் பிறைபோல் வளர்ந்திடுமாம்
ஈயாதான் செல்வமது எத்தனையுண் டாயிடினுஞ்
சாயு பமரபட்ச சந்திரன்போற் றேய்ந்திடுமாம்
என்ன வறுமையினு மேற்பதொன்றில் லாவிட்டால்
அன்னவனே பாக்கியவா னுகுமென்று சொல்விடலாம்
பாரித்த செல்வர்கள் பலர்க்குதவி செய்யாரேல்
தாரித் திரரென்று தப்பாமற் சொல்லிடலாம்
கையா னதுநமது கண்ணிலே குத்திவிட்டால்
கையைத் தரிக்கின்ற காரணமுண் டோவதுபோல்
இளையோர் தமையடைந்தோ ரேதுகுற்றஞ் செய்தாலும்
பிழைபொறுக்க வேண்டுவதே பெரியோர்முறைமையதாம்
அழகிளமை மூப்பு மயிஸ்வரிய மிந்நான்கும்
வளமுடனே நம்முடைய மரணவரை நில்லாது
நன்னயஞ்சேர் பாலுடனே தல்லதண்ணீ ருங்கலந்து
அன்னத்தின் முன்வைத்தா லாவின்பால் மட்டுமுண்ணும்
தண்ணீரைத் தள்ளுந் தகமைபோ லேயுலகம்
விண்ணுன குற்றத்தை விடுங்குணத்தைக் கொண்டிடுமாம்
எண்ணியே நுண்ணிய நூ லெண்பதனைக் கற்ருக்கால்
மண்ணிற் சுகமுவரும் மறுமையிலே சொர்க்கமுறும்
இட்டமுறு மோகஸ்திரீ யேதிகழ்ச்சி செய்தாலும்
திட்டியடித் தாலுஞ் சினமும்வர மாட்டாதே

இன்பம் பொருளுமிக வெய்துவதா னாலுமதிற் ணு
றுன்பம்வருமென்றறிந்தாற் சொற்பனத்துநோக்கவொண

பயனில்லாவார்த்தைசொல்லிப்பலநாளுங்கோளுரைத்தால்
தயவா யவர்செய்யுந் தர்மம் பலியாது
ஊரார் பகைதுன்ப மோயா மகாவறுமை
மாரு தெனமுன்னுள் வள்ளுவனுர் சொன்னுரே
வாழ்வுள்ளோ ராளுலு மாஞானி யானுலும்
தாழ்வுள்ளோ ராளுலுந் தயிரியவா னானுலும்
நாடொப் பனநெகிழ லாகா தொருநாளும்
மூடத் தனமாக முன்பின்னுச் செய்பவர்தாம்
அருபியா யுள்ள அலகையோ டொக்குமென்றும்
பிறகவரைச் செத்த பிணத்தோடே சேர்க்கவென்ருர்
பொருளில்லா தார்க்கிந்தப் பூமியிலே கீர்த்தியில்லே
அருளில்லா தார்க்கோ அவ்வுலகத் தேதுமில்லே
ஊன்தின் பவர்க்கோ வொருபோ தருளுமில்லே
தானதர்மஞ் செய்தாலும் சாம்பரிலே விட்டநெய்யாம்
வாக்கிலொன்று பேசி மனதிலொன்று வைத்திடுவார்
காக்குங் குரோதமுள்ளார் கன்னியரைக் காதலிப்பார்
வேடச் சடைவளர்த்து வெண்ணீற்றைப் பூசிடுவார்
தாடி வளர்ப்பார் தலேமொட்டை செய்திடுவார்
வகையில் செயலுடையார் வயிறுபிழைக் கத்திரியும்
செகசாலக் காரரிவர் சித்தியொன்று மில்லாரே
ஆவென்ற பாவமொன்றும் மற்ருற் பிறவியரும்
சீவன்முத்த னுகுமென்று செப்பினுர் முன்னூலோர்
பிறவுயிரைக் காத்தாலும் பேதமில் லாமனது
விரதபங்க மில்லாமை வெகுளாமை யிந்நான்கும்
தவமாகு மென்றுந் தங்குமெஞ் ஞானமென்றும்
சிவயோகி யாவமென்றுஞ் செப்பினுர் வள்ளுவரும்
மன்னவரே யானுலும் மற்றெவர்க ளானுலு
மென்னவித மாயும் இடர்வருமென் றேயறிந்தால்
கைத்தான செல்வத்தைக் காவாமற் போனுக்கால்
வைத்தான வாழ்வுகெடும் மாநிலத்திற் றுன்பமுண்டாம்

மாறுநிலையும் வல்பிணியுந் திக்கோளும்
வேறு பகைவர்கள்வர் மேலு மெவர்பகையும்
வாராது தற்கால வகையறிந்து தீர்ப்பவரை
ஆராய்ந் தறிந்து மவர் துணையைக் கொள்ளுவதால்
ஈகையில்லா மாந்தரிருந்தென் னிறந்தென்ன
ஆகையா லேமிருக மதனிலே சேர்க்கவென்றார்
தலமீதில் மிக்கான சாத்திரங்கள் கற்றாலும்
முலக வியற்கைதனை யொன்றும்விட லாகாது
இல்லாதா ராணாலு மிருந்து முலகவளம்
வல்லமையாய்ச் செய்தவரே மாதவருக் கொப்பாகும்
வலியா ரெளியாரு வானவான் மூவரிட
மலிவான கோபங்கள் வைத்தாரே யாமாகில்
நாடாளாம் லட்சுமியும் ராசர் பகைநேரும்
கேடாய் முடியுமென்று கிளர்த்தினா ளவ்வையுந்தான்
எப்போதுங் கீர்த்திசற்று மில்லான் றனைச்சுமக்கும்
வெப்பினாற் பூமி விளைவுகுன்றிப் போய்விடுமாம்
குற்றமில் லாமற் கொடுத்திசையைத் தேடாரை
செத்த பிணத்தோடே சேர்க்கவென்றார் வள்ளுவரும்

காலம்.

தந்தைதாய் புத்திசொன்னாற் றள்ளிமுனி யுங்காலம்
நிந்தனையாய் சற்குருவை நிகழ்த்துங் கொடுங்காலம்
பெரியோரைத் தூஷணித்துப் பிறர்க்குதவி யில்லாமல்
அரிசிவனை நிந்தனையா யகம்பேசு மிக்காலம்
மெய்யேபொய் யாங்கால மேலோர்கீ ழாங்காலம்
பொய்யேமெய் யாகப் பொருந்து மிதுகாலம்
வன்சமரி லோடினவர் வரிசை பெறுங்காலம்
அஞ்சியே யாணட்ங்கி யரிவையர்மே லாங்காலம்
இன்பமுறு நூல்படித்தா லிகழ்ச்சி யுறுங்காலம்
பண்பில்லா நையாண்டிப் பாட்டைமெய்க்குந் துற்காலம்
இனிதான சற்குணர்க்கொன் றீயாக் கலிகாலம்
அனியாயக் காரருக்கு மடிக்குநல்குந் தற்காலம்

பெண்டாட்டி வைதாலும் பிரியன் குறியாமல்
கொண்டாடிக் கொண்டிருக்குங் குலாமருக்கே யாங்காலம்
ஆனகலி காலத் தடைவி துவே யானலு
மானபர ஞனவனும் வையகத்தி லுண்டெனலாம்
இருப்பார்க் கொருகட னு மெய்தாத காலமுமாம்
ஒருக்காலு மீயார்க் குதவுவா ரிக்காலம்
ஆசாரந் தர்மங்க ளங்கசுத்தி மூன்றுமில்லார்
வேசைவெள் ளாட்டிகளின் மேலிட்ட மாங்காலம்
தேடியிடு வார்களுக்குத் தேவியர்க்கிட் டாக்காலம்
பேடிப் பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க் குங்காலம்
சுபமாய்க் குடிப்பிறந்த சுதாகரர்க்கு மேன்மைகொஞ்சம்
விபசாரத் திற்பிறந்தோர் மேலவரா மிக்காலம்
கொண்டபெண்ணை விட்டுக் கொடிதான லவ்வாடி
முண்டைகளைக் கொண்டலையு மூடர்மே லாங்காலம்
சொந்தமண வாளனையுந் தூஷணித்துச் சோரத்தில்
அந்திபக லூர்சுற்று மவிசாரிக் காங்காலம்
மேற்குலமுங் கீழ்க்குலமும் விபசாரத் தில்மிஞ்சி
வாகுபெறும் வேசையர்கள் வறுமைக்குள் ளாங்காலம்
பிள்ளைவய தில்மிகுந்தால் பிதாவினது சொற்கேளான்
தெள்ளியதோர் வித்தைகற்ருல் சீஷன்குரு வைத்தேடான்
பெண்டான கள்ளியவள் பேச்சில் மிகுந்தாக்கால்
கொண்டமண வாளனையுங் குறியாக வெண்ணளாம்
பாரோர்க ணேய்திர்ந்தாற் பண்டிதரைத் தேடார்கள்
சீரான செல்வம்வந்தாற் றெய்வமதைப் பேணர்கள்
தன்னுடைய மாதா தமையன் மனையாட்டி
மன்னவர்க டன்றேவி மாமியா ரானளரும்
தெய்வநிக ரான தேசிக ஞர்தேவி
ஐவரையுந் தாயென் றருளினுர் முன்னூலோர்
பெற்றபெண் போலவே பேணி மருமகளை
வைத்தா தரித்து வருமாமி யேமாதா
தந்தை தனக்கிளைய தாரமந்தக் கைக்கேசி
பிந்தவருஞ் சித்ராங்கி பிள்ளைகட்குச் சத்ராதி

பின்தாரப் பிள்ளையென்று பேதகமில் லாதமனக்
குந்திதனக் கொப்பாவ கோதைமுதல் மாதாவாம்

### பிதா.

தன்னையே பெற்றவருஞ் சற்குருவு மன்னவரும்
மன்னுந் தமயனுடன் மாமன் வளர்த்தவரும்
வித்தைவரு வித்தோர் வெங்கலியைத் தீர்த்தவரும்
மற்றுமொரு வாபத்து வரும்போது காத்தவரும்
ஓரொன்ப துபேரு முற்ற பிதாவென்று
கூறு மனுநீதிக் கொள்கையிது வேயாகும்
கல்விவரு வித்துக் கடனென்று மில்லாமற்
செல்வமுடன் வைத்த திறவானோர் தந்தையுமாம்

### மைந்தர்.

அற்பாராம் நூறுபிள்ளை யானாலும் பெற்றுமென்ன
சற்புத்ர னென்றானாற் றலைமுறையெல் லாம்விளங்கும்
தந்தைதாய் வாக்யந் தமயன் குருவாக்யம்
சிந்தைதனிற் சத்தியமுந் தெய்வவிசு வாசமுடன்
இத்தகமை யாறுடையோ னினிய தசரதன்றன்
புத்திரனுக் கொப்பான புத்திரனே புத்திரனும்
எத்தனைதான் செல்வத் தியல்போ டிருந்தாலும்
புத்திரனில் லாவாழ்வு போசனமு நஞ்சாகும்
தந்தைதாய் வாக்யமது தன்னைப்பரி பாலித்தோர்
நந்தாத் தசரதனும் ராஜகு மாரனென்பார்
பிதாவுடைய வாக்யம் பிசகாது காத்தவன்றான்
சுதாகரரில் மிக்க சுதன்பரசு ராமனென்பார்
ஆசான்றன் வாக்ய மனுவுந் தவறுதான்
வாசாலன் சத்யமுள்ள வாய்மையரிச் சந்திரனும்
தமயனுரை தட்டாத சற்புத் திரரானோர்
தமையுமங்கே சீர்தூக்கிற் றருமனுக்கு நேரிளையோர்
தந்தைபேர் தன்பேருந் தாரணியி லேவிளக்கித்
தந்தைதாய் சொல்மறுக்காத் தன்மையோன் புத்திரனும்
தந்தைக் கிசைந்தமறு தாரமே தன்றாய்போல்
வந்தனைசெய் மைந்தர் மனுகுலத்து மைந்தரொப்பர்

நல்லார்போல் லாரென்று நவிலிருபா லாயுலகஞ்
சொல்லுவதை விந்திலுற்ற சுதரா லறிந்திடலாம்

### சோசியம்.

உற்பவித்த நாளும்பின் னென்பதுட னென்பதுவும்
வைப்பேதும் வைக்கவொண்ணு வழிபோக லாகாது
வல்பிணியுந் தீராது மருந்துண்ண லாகாது
கல்யாண மெண்ணெய்மயிர் களைந்திடலு மாகாது
இல்லம் புகுத லினிதுண்ண லும்விவைகள்
நல்லலங்கள் செய்திடவு நற்பணிகள் நற்றாசு
தானுந் தரிக்கவிது சார்ந்தநா ளாகுமென்று
மேநாட் கணித விதியா லுரைத்தனரே
திங்கள்முத நாளுமது சென்றகடை நாளுடனே
மங்கையர்கள் பூப்புநாள் வாசியமா வாசியிலும்
சென்மநாள் மூன்றினிலும் சேயிழை யைப்புணர்ந்தால்
தன்மமல்ல வாழ்நாளுந் தான்குறையு நோயணுகும்
தலைக்கெண்ணெய் போசனமுஞ் சவரமுட னித்திரையும்
நலத்தைக் கொடுக்குமந்த நற்கிழக்குத் தெற்கதுவும்
மற்ற விருதிசையு மாகாது மத்திபமாம்
அத்த மழிவதல்லா லாயுளவிர்த்தி யில்லையென்றார்

### இலட்சுமி யிருப்பிடம்.

மாயவன்றன் மார்பினிலு மன்ன ரிடத்தினிலும்
தூயதொரு வில்வந் துளவங் கடப்பமலர்
தாமரையின் மீதினிலுஞ் சாகரத்திற் கங்கையிலும்
சேமமுறு மியானை தேசி முகத்தினிலும்
ஊதுகின்ற சங்கமுட னுருத்ராட்சஞ் சாமரத்தில்
கேதனத்திற் றேரினிலே கெட்டதி துன்னூர்பால்
சுத்தமுள்ள வீரரிடஞ் சுத்தமா கியமனையிற்
சத்தியஞ்சேர் வாக்குடையோர் தர்மபரி பாலனர்கள்
அழகுஞ் சுசிகரமு மமர்ந்தகுணப் பெண்ணிடத்தில்
வளமை தருமபசுக்கள் வாழு மிடந்தனிலும்
மாகனம்போல் சுத்த மான விடந்தனிலும்
கோசனக மாது குடியிருப்ப ளெந்நாளும்

மூதேவி யிருப்பிடம்.

சோரஸ் திரீயிடத்திற் சூதகப்பெண் ணிழலில்
பாரக் கிடாவிற் பல்விளக்காப் பேரிடத்தில்
சூளைப் புகையிற் சுடுகாட் டெரிபுகையில்
காளையாங் காமுகர்பால் கழுதை யிடத்தினிலும்
கள்ளி நிழ லதிலுங் கைம்பெண்க டம்மிடத்திற்
கொள்ளிக் கரியுமியிற் கொட்டை நூற் பாரிடத்தில்
நீசர் நிழலில் நிட்டையில் லாரிடத்தில்
பேசுங் கடுஞ்சினத்தோர் பேடி யிடந்தனிலும்
சுத்தமில் லாமனையிற் சுராபான ரிலிரவில்
வெற்றி பெறும்வேல் விளக்கி னிழல்தனிலும்
என்றுஞ் சுசிகரங்க ளில்லார் விதவைகளை
யொன்றி யணைவோர்பா லுதயந் துயில்வோர்பால்
மூதேவி யாளுநித மூடிக் குடியிருப்பாள்
மீதூ ணருந்துவர்பால் மேன்மைசற்று மில்லாதே
பாங்காக நாளும் பகற்புணர்ச்சி செய்பவருந்
தாங்காதிடக் கையாற் றாம்பூலந் தின்பவரும்
போசனங்கள் செய்கின்ற போதிற் சிரசினிலே
தூசு புனைந்துண்ட துன்மார்க்க ரானவரும்
காலையிலு மாலையிலுங் கண் துயில்வார் தம்முடனே
நாலுபே ரானவர்பா லட்சுமியும் நில்லாளே

பகை.

பாரம் பெரியகத்தி பஞ்சுதனக் கேநாணும்
சூரியனுஞ் சந்திரனுந் துட்டரவி னல்மறையும்
சிற்றெறும்பால் யானை திகைக்கு மதுபோல
அற்பரால் மேலோர்க் கவதிகளும் வந்தெய்தும்
தந்தைதாய் சொற்கேளார் தடுப்பார் கொடுப்போரை
அந்தக் கொடியோரு மட்டமத்தி லேசனியாம்
சபையிற் பிரசங்கந் தன்னிற் பழுதுரைப்படபார்
அபயமின்றிப் பேச்சில்மிச்ச மானதொரு பெண்டிரும்
தாமாய் விரோதியுடன் றாமிவர்கள் மூவருந்தான்
சேமத்தி லேவந்த செவ்வாய்க் கிணையெனலாம்

தன்னைமிஞ் சிடுமடுமை சந்திராஷ்டம் பங்குக்காய்த்
தன்னைச்சபை யேற்றுந் தம்பிசென்மச் சூரியனும்
சகோதரற்கு வஞ்சனைசெய் தமயனு மென்பவன்முன்
மகாபாவி மூன்று மடத்து வியாழமதாம்
பார்த்திபர்கள் மெச்சவென்று பழுதுசொல் லிக்கொடுப்
எற்றமிகும் பொல்லாத இராகுவுடன் கேதுவுமாம் (போர்
சாலக்கடன்பட்ட தந்தையரு மார்க்குமனு
கூலமா யுட்பட்டுக் கொண்டுதிரி யாதாரும்
வித்தையில்லாப் பிள்ளையுடன் வேசையாம் பெண்டாட்டி
சத்துருவாம் நால்வரென்று சாற்றினர் முன்னூலோர்
வேங்கை பதுங்குவதும் மேழகம்பின் வாங்குவதும்
பாங்காப் பகையுறவும் பாம்புசாய்ந் தாடுவதும்
நல்லோர் பெரியோர்க ணயந்து வணங்குவது
மெல்லியர்க டஞ்சிரிப்பும் விழிமழுக்கு மின்னொளியும்
மிக்கான வில்வளைவும் வேழ முறங்குவதும்
உக்கிர தளஞ்சமரி லொன்னர்க் கொதுக்குவதும்
இத்தகையா மீரைந்து மெளிதா நினைக்கவொண்ணு
மத்திப மாயுயிர்க்கு வதைகளு முண்டாகும்
சொற்குற்றம்பாராட்டித் தொழுவழக்கைச்செய்பவர்போல்
பற்காட்டிச் சீவனங்கள் பண்ணித் திரிவதுதான்
வலிதான வாடரவின் வஞ்சப் படத்தினுள்ளே
எலிவாழ்ந்த தாமென் றியம்பினர் முன்னூலோர்
பண்பாய்க் கடுவுறவும் பண்ணவந்தா ராயினதன்
பின்பவரை யும்பிரிந்தாற் பிணக்காம் பகைநேரும்
அங்கபங்க மானுலு மசூசியங்க ளானுலும்
தங்கள்குலத் தேதுந் தாழ்வுற் றிருந்தாலும்
நிந்தைகள் சொல்லி நெகிழ்ந்திருக்க லாகாது
எந்தக் குலமு மிழிவில்லா தில்லையில்லை
துன்பப் பழிபகையுந் துடரும் பழிபிழைகள்
பின்பவர்க்கு மெய்தும் பெருமைசற்று நில்லாது

பகை வெறுப்பு.

நேர்ந்த வினைவலியு நேர்வாக டன்வலியும்
சேர்ந்த துணைவலியுஞ் சீர்தூக்கிச் செய்வதுமாம்
கூடாத காலமடைக் கொக்கதுபோ லேயிருப்பாம்
கூடுமந்தக் காலமடைக் கொக்கதுபோல்வெற்றிகொள்வாம்
நுப்பமி வறும் பெலாங்கூடி நோக்காம லேயேற
ஒப்பில்கல் லுங்குழிந்த வுவமைபோல் வெல்லுதலாம்
மெள்ளமெள்ளப் பாயும் வெள்ளங் கடுமலையின்
கல்லைக் கரைக்குங் கதைபோற் பகைதெரிதல்
கால மதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனை
காலமது தப்பினால் காக்கைதனைக் கூகைவெல்லும்
சிலநாளா யானையொரு தேங்காயி னோடடக்கி
பலிதமுள்ள வேளைகண்டு பாகனையே வென்றிடுமாம்
பண்பாகக் காலமது பார்த்து பகைசெலுத்தும்
பண்பிதுவா மென்று பகர்ந்தாரே முன்னோர்கள்
உற்ற பகைவரென்று லுள்ளாக்கிக் காரியங்கள்
பெற்ற பிறகுமதைப் பேதமின்றிக் காட்டுவதாம்
காலத்தின் சீலங் கண்டறிந்து கொள்ளாதார்
கோல மழிந்து குரங்காவார் தப்பாது

சேரிடம்.

சந்தன விருட்சமதைச் சார்ந்தமர மவ்வாசம்
வந்தமக மேரணைந்த மைக்காகம் பொன்னிறமாம்
பாலில் கலந்தநீர் படிகமணிக் குள்வடமும்
சால மரகதத்தின் சாய்கைபட்ட திம்மூன்றும்
தன்னிறங்க ளைக்கொடுக்குந் தன்மைபோல் நல்லோரை
நன்னயமாய்ச் சேர்ந்தோர்க்கு நற்குணமே யுண்டாகும்
நல்லாரைக் காண்பதுவு நல்லார்சொற் கேட்பதுவும்
நல்லார் குணஞ்சொல்லும் நன்மையுண்டா மென்றனரே
ஆசார மன்பு மறிவடக்க முள்ளோரை
தேசத்திற் கண்டு சேர்ந்தாற் பெருமைவரும்
கதிரோ னுதிக்கையிலே கண்ட பெருஞ்சாயை
மதியமதி லேகுமது வாறுசிறி யோரிணக்கம்

மதியந் திரும்பினபின் வாதிக்குஞ் சாயையைப்போல்
சதிராய்ப் பெரியோரைச் சார்ந்தாலே நன்மைதரும்
கற்றபெரி யோருறவு கரும்பு நுனியிலிருந்
துற்றதல வேர்வரைக்கு முள்ளருசி போலாகும்
சிறியோ ருடனுறவு தின்னுங் கரும்படியும்
உரிய நுனியுமட்டு முண்டருசி போலாகும்

### செல்லாவிடம்.

கடலோடுங் கப்பலது கரையிலே யோடாது
புடவியிலே யோடுந்தேர் புனலிலே யோடாது
தண்ணீரில் முதலையதைத் தந்திவெல்ல மாட்டாது
நண்ணுபுலி காடன்றி நாடுற்றாற் கேடடையும்
செல்லுமிட மிவ்வாறு திறஞ்செலுத்த வேண்டுமன்றிச்
செல்லா விடந்தனிலே திறஞ்செலுத்தக் கூடாது

### யோகம்

மன்னர்க்கு யோகம் வரிசை யதிகாரம்
பன்னும்சாம் பிராச்சியமும் பட்டாபி ஷேகமென்பார்
நல்லகுண மாகுமுன்னல் நாடி வலியவந்து
புல்லிடிலே யோகம் புத்தமிர்த சித்தமுமாம்
மண்ணிற் புதைத்தபொருள் வாதமுறைக் காசையுற்று
நண்ணுவார்க் கெய்தாம னண்ணார்கட் கெய்துவதும்
மிஞ்சும் பயிர்விதைத்து விளைவுகுன்றிப் போவதுவுங்
கொஞ்சம் பயிரிடுவோர் கூடிவந்து வாழ்வதுவுங்
கப்பல்வியா பாரங் கணக்குரைத்துப் போவதுவும்
சொற்பமாய் வாணிபஞ்செய் தோர்களுக்குக் கூடுவதும்
காணுமற் காணுமற் காவலர்கள் கேள்வியினல்
தோணுத லாம்வலியத் தொழில்கொடுத்து வாழ்வதுவும்
மேனளிற் றந்தைதாய் விட்டகுறை யாகுமென்று
தானுமுன்னள் செய்திருந்த தர்மமது வாவதென்னும்
அந்நாள்நற் பூவெடுத்தே அர்ச்சனைகள் செய்தமென்றும்
இந்நாட் பெரியோருக் கீய்ந்துவரம் பெற்றதென்றும்
லட்சுமிக டாட்சமிந்த நான்குவகை யோர்க்குமென்றும்
உச்சிதமாய் முன்னே ருரைத்தா ருலகோர்க்கே

திருமடந்தை வந்தால் சிறப்புங் கனமுமுண்டு
பொருளுந் துரும்பாகும் பொல்லோரு நல்லோராம்
செல்லாத வார்த்தைசெல்லுஞ் செய்புமரி யாதையுண்டாம்
எல்லாரு மேபுகழ்வா ரெதிராளி யும்முறவாம்
கீழோரு மேலோராய்க் கிளையுமிக விர்த்தியுண்டாம்
தாழ்வும் பெருங்காற்றுத் தண்ணீர்போற் குன்றிப்போம்

மனவூக்கம்.

வீரப் புலியுயிரை விட்டாலே தோல்கொடுக்கும்
சூரனுயிர் போமளவுந் தோல்வியென்று பின்வாங்கான்
உத்தமியே யெந்நாளு முயிர்க்குலயம் வந்தாலும்
சற்றூகி லும்பிறர்க்குத் தன்னியத்தைத் தான்கொடுக்காள்
ஏற்கைபோய்ச் சாலவுந்தா னென்னதுன்ப முற்றாலும்
ஊக்கமது கைவிட்டா லுயிர்க்குலயம் வந்தெய்தும்
உள்ளஞ் சிதறும லொன்றினையே கைப்பிடித்தால்
தெள்ளி தருளுஞ் சித்திமுத்தி ரெண்டுமெய்தும்
பலதும் நினைக்கவொரு பலனேது மெய்தாது
அலைவாய்த் துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை
ஐம்புலனை யும்புரியோ ரடக்குவது வேயருமை
செம்பொன்னெல்லாந்தேடித் தினங்கொடுப்ப தேயருமை
தெண்டிக்க வல்லவன் சினம்பொறுப்ப தேயருமை
கொண்டகண வற்கிசைந்த கொம்பனையு மேயருமை
நேசமொன்றில் பேதைமன நிற்பதுவு மேயருமை
தேசத்தி லேவரையுந் தெய்வப் பிறப்பெனலாம்

அளவிளாமை

பொங்குங்கட லாழம் புருஷயோ கஞ்சூது
மங்கையர்க டன்மனமும் வஸ்துவின் றனிநிலையும்
வானைவு மாற்று மணலு மழைத்துளியும்
வானி லுறுகணமு மண்ணுண்ட ராசாவும்
உற்றபெரி யோர்க ளுள்ள கருத்தள வுங்
கற்றோர் கருத்துங் காம கணையளவும்
மானிடத்தின் சென்ம மனுத்தொகையு மாமனையும்
மான பருவதங்க ளளைத்து மகினிரையும்

பார்க்குள்ளே யிந்தப் பதினாறு மாண்புவியி
லார்க்கு மளவிடவு மாகாதென் றூர்தவரே
இறந்தார் பிறந்தார்க ளிவ்வளவா மென்றாலுந்
துறந்தார் பெருமைகளைத் துகையறிந்து சொல்லவொ [ண்ணா
ஆயுள்நிதா னங்க ளாறிரண்டி லேகிரகந்
தூயநிக ரேனநிலை சொல்லயெவ ராலுமில்லை
சூரியன்முன் னிற்காலஞ் சுடுமணலிற் நிற்கவொண்ணா
ஆரணியு மீசர்முன்னே யஞ்சாமற் பேசிடினும்
தேசமதில் முக்யச் சிவனடியார் முன்புநின்று
பேசவரி தென்று பெரியோ ருரைத்திடுவார்
வாரியினி ராழம் வானளவு மாமலையும்
ஆறின் கரைமணலு மாகாசத் தேயுவையும்
அன்பாமிவ் வைந்து மளவுகண்டு சொன்னாலும்
கொம்பனையார் நெஞ்சக் குறிப்பறிய வொண்ணாதே
வெள்ளம் பறவைகளும் விலங்குடனே வேசையர்கள்
உள்ளமிவை நான்கு மொருவழியாய் நில்லாதே

உதவி.

வாவிநீ ரம்பலத்தில் வைத்த மரநிழலுந்
தாவுமண லூற்றுத் தண்ணீரின் பந்தலுடன்
பாங்கான சந்நிதியும் பழுத்தமர மானதுவும்
தாங்கும் விபசாரி தனமும் நிலவினொளி
பார்க்குள் விவேகியர்கள் பாக்யமிவை யொன்பதுவுந்
ஆர்க்குமுப கார மல்லாது வீணலவே
நல்லோர்தே டும்பொருள்கள் நாவலர்க்கும் வேதியர்க்கும்
வல்லகுரு வானவர்க்கும் மாதா பிதாக்களுக்கும்
புத்திரர்க டங்களுக்கும் போற்றுகுல தேவதைக்கும்
உற்றசகோதரர்க்கும் உண்டென்று நம்பினர்க்கும்
தர்மமே செய்பவர்க்குஞ் சார்ந்த வறிஞருக்கும்
இம்மாத் திரம்பேர்க்கு மெய்த விளைபொருளே
இல்லந் தனக்குத்தன் னேந்திழையா ளேதுணையாம்
நல்லதே கந்தனக்கு நற்றுணைவ ரேதுணையாம்
தேசாந் திரனுக்குச்சீர் துணையாங் கற்றகல்வி
மாசற் றிகபரத்தில் வருந்துணைதான் செய்ததர்மம்

வர்த்தகர்பால் வைத்தபொருள் மன்னவர்க டன்பழக்கம்
உற்றவி வேகர்க் குபகா ரஞ் செய்ததுவும்
பருவத்தில் பெற்றபிள்ளை பக்குவத்திற் கற்றவித்தை
தருணத்தி லீரைந்துந் தானுதவுந் தப்பாதே
என்னபகை யானாலு மிடர்க்குதவி செய்தனலம்
மின்னார் கவிசொலினு மேன்மைசெய்வ ரேபெரியோர்

உதவாமை.

நாய்பால் சொரிந்துமென்ன நாணல்மிகப் பூத்துமென்ன
பேய்பொன்னைக் காத்துமென்ன பேடிகையி லாயுதமேன்
எட்டி பழுத்துமென்ன யிண்டு தழைத்துமென்ன
பட்டுபணி சித்திரத்திற் பண்ணி யிருந்துமென்ன
சற்குணமில் லாப்பென் தங்கநிற மாகியென்ன
மிக்கசபைக் கோழை மிகுகல்வி கற்றுமென்ன
ஆட்டின் கழுத்தி லதரதுவும் நீண்டென்ன
காட்டி னிலவெறித்தென் கானலில்நீர் கண்டுமென்ன
வேசைக்குப் பொன்கொடுத்தென் வீணருக்கு நன்றிசெய் தென்
மாசுடைய வற்பருக்கு வந்தென்ன வதிகாரம்
காட்டுக் கரடிமயிர் கறுத்தநிற மாகியென்ன
நீட்டியிருந் தாலுமென்ன நெடுகங் குறையிலென்ன
இத்தனையாச் சொன்னவிவை யெண்ணிரண்டு மீயாத
லுத்தர்கள்தன் வாழ்வதனுக் கொத்திருக்கும் தப்பாதே
தேகியென்போர்க் கீயாதார் தேடாதார்க்கும் பொருளுண்
டாகிவந் தாலுமென்ன அழிந்துபோ னாலுமென்ன
பேடி யழகுகண்டு பெண்கள் மகிழுவதும்.
நீடுவஞ்சர் சொல்லை நிசமென் றிருப்பதுவும்
கானல்கண்டே யோடுங் கலைமானுஞ் சாலவுயிர்
பானிலவு காத்திருந்த பச்சைக் கிளியதுவும்
தேனருந்தச் செண்பகத்திற் சென்ற சுரும்பினமும்
தானுயர்ந்த தேன்கண்டு சப்பாணி வேட்டதுவும்
புல்லர்களின் வாழ்வுகண்டு புகழ்பாடிப் போம்புலவர்
வல்லமைக்கொப் பென்று மனுநா லுரைத்திடுமே.
கல்லாதா ரேட்டினிலே கண்டெழுதி வைத்தவித்தை
உல்லாச வேசையர்க ளுறவுசெத மென்றிருக்கை

மறுதேசம் போனபிள்ளை வஞ்சருட னேசமதும்
வருமென்றே யன்னியர்பால் வைத்த பொருள்பலவும்
தன்னைப் பெறாததொரு தந்தைதா யானவரும்
பின்னே யுடன்பிறவாப் பின்னவர்கள் முன்னவர்கள்
பேறாகத் தம்வயிற்றிற் பெற்றுவளர்க் காதபிள்ளை
ஊரா ருடையசெல்வ முள்ளன்பி லாதபெண்டீர்
சத்தியமா யீராறுந் தருணத் தருணங்கட்
குற்ற சமயத் துதவாது கண்டீரே
ஆற்றிற் கரைத்தபுளி யனலிலே போட்டவெண்ணெய்
காற்றிற் பறந்தபஞ்சு காட்டி லெறித்தநிலா
விரித்த சமரினிலே வீழ்ந்ததொரு பெண்பாலும்
பரித்த கடற்சுழியின் பாற்பட்ட கப்பலுந்தான்
சுட்டமண் ணதிலே தூவியிட்ட பந்நீரும்
இட்ட முடன்விழலுக் கிறைத்ததொரு நந்நீரும்
வீணருக்குச் செய்தநன்றி வேசைக் களித்தபொருள்
காணுமிவை பத்துங் கைகூடாக்காரியமாம்
சற்பாத் திரமறிந்து தானஞ்செய் யாத்தருமம்
உப்புக் கடல்தனிலு முவர் நிலத்திற் பெய்தமழை
பாம்பின்வாய்த் தேரை பரத்தைக் களித்தபொருள்
மேன்பாடு பெற்றபுவி வேந்தரிடஞ் சேர்ந்தபொருள்
போனபொருள் நமன்கை புகுந்ததொரு மன்னுயிரும்
ஆனவா யின்கரும்பு மணைகடந்து போனவெள்ளம்
வெய்யவர்செய் கொள்ளை வெந்த பெருவயிரம்
வையகத்தி லொன்பதுவும் வாராது வந்தாலும்
அய்யோ வுலுத்த னரைக்காசு மீயானும்
கையிலுறு மான்மயிருங் கற்புடையாள் தன்னியமும்
கானும் வேங்கையின்றோ லதிசூரன் கைவேலும்
மாண்டுலோ பிபொருளைந் தும் வரவுயிர்கள்
போனாலே யன்றியொரு போதினுமே கிட்டாது
கானீடு முள்ளிருக்குங் கத்தாழை யின்கனியும்
வர்ன முருக்கின் மலரிவைபா லேதுபயன்
தாழைமட லேபெரிது சன்னமலர் சூடிடலாம்

சன்ன மகிழமலர் சருகாகக் காய்ந்தாலும்
வின்னமில்லாத் தன்மணமும் விட்டகன்று போகாது
ஆழியில் நீரதிக மள்ளியுண்ண லாகாது
ஆழியருகூறிவரு மந்நீரு நன்னீராம்
இங்கிவற்றை யொப்பாக ஈகைசற்று மில்லாத
அங்கம் பெரிதா யழகா யிருந்துமென்ன
தேசதுவில் லாவிடினுஞ் சிறியவுரு வானாலும்
பாசமறு சற்குணமும் பலர்க்குதவி யேபெரிதாம்
வேசையர்கள் நட்பும் விளக்கி னதுவொளிவும்
மோச வலையிரண்டு மூன்றுமொன்று மென்றனரே
கைப்பொருளற் றால்வேசி கடுகளவு நட்புமில்லை
மெய்ப்பாக யெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை

நற்சிறப்புத்தமர்.

பாவபுண் ணியமறிவார் பலபொரு ளுமிச்சியார்
பூவைபல ளேக்கார் புராண நெறியுணர்வார்
மாதவங்கள் செய்வார் வன்கொலை கண்டஞ்சுவார்
சூதாடா ராகவொரு துன்பத்துக் குள்ளாகார்
உய்யவே யிவ்வா றுடையவர்கள் சற்குணராம்
தெய்வத்தின் றத்துவமாய்ச் செப்பினர் முன்னோர்கள்
மாதா பிதாகுரு வானவரைத் தெய்வத்தை
மீதாப் பணியும் விசுவாச முள்ளவர்கள்
தன்தார மன்றிமறு தாரந் தனைநோக்கார்
புந்தி மகிழ்ந்ததிதி பூசை புரிவோரும்
சத்தியமொழி பூர்வ தர்மபரி பாலனர்கள்
சுத்தமுறு நந்தவனச் சோலையது வைத்தவரும்
யார்க்குட் சகாயமதாய்ப் பாட்டைதனை சீர்திருத்தி
ஏர்க்கந்தண் ணீர்ப்பந்தல் மண்டபங்கூ வம்வாவி
செய்யுமகா புண்ணியத்தே சித்தம்வைக்கு முத்தமர்க்கு
எய்யா மலைபோலே யேது துன்பம் வந்தாலும்
வெய்யில்தனைக் கண்டு விலகும் பனியெனப்போம்
கைலாச நற்பதமெக் காலுமிவர்க் குண்டாகும்

தாமரையின் மாமலருஞ் சவ்வாது புனுகுடனே
பூமருவு தேனும் புணரியுறு சிப்பிமுத்தும்
பொன்னுங் கவரிமயிர் புகழ்சேர்கோ ரோசனையும்
நன்னயஞ்சே ராவின்பால் நற்றூசு பட்டதுவும்
ஈதுபத் தானவகை யெங்கே யிருந்தாலு
மேதமற்றூற் போல்நல்லோ ரெக்குலத்தோ ராயிலென்ன
உப்புங்கற் பூரமது வொன்றுபோ லேயிருந்தும்
உப்புக்குங் கற்பூர முயர்ந்தவிலை யாகுமன்றோ
எல்லோருக் கும்ரூப மொன்றா யிருந்தாலும்
நல்லோர் தமக்குநிக ராவாரோ பாவிகள்தாம்
பக்கமுற்ற மூடர் படபடத்துப் பேசுவது
வெங்கலத்தி னோசை விதமாகுங் கண்டீரே
நல்லதங் கத்தி னுதம்போற் சீராக
மெல்ல மிருதுச்சொல் விளம்புவா ருத்தமர்கள்
பன்றியைக்கண் டால்யானை பாதை விலகுதல்போல்
நன்றியற்ற பேதையர்க ணடையின் வரவுகண்டால்
அந்த வழிவிலகி யப்பாலே போகுவது
சிந்தைதெளி மேலோர்கள் செய்கையென் றுசொல்வார்கள்
நன்னயஞ்சேர் பொன்னும் நற்பாலுஞ் சந்தனமுங்
கன்னல் தனையுமென்ன கண்டனைகள் செய்தாலும்
முற்குணமே காட்டு முறைபோற் பெரியோர்க்குத்
தக்கயிடர் வந்தாலும் சற்குணம் போகாதே
சிவயோகி யானவர்க்குச் செனம்மொருக் காலுமில்லை
தவஞ்சேர் ரசவாதி தனக்கனுவும் பஞ்சமில்லை
காலை துயிலொழிதல் காணுமை லேபுணர்ச்சி
மாலை முழுகல் மனைதனிலே செல்வதுவும்
உற்றோரோ டுண்ண லுயிரோம்ப லிவ்வாறும்
இத்தலத்தில் வாழ்வோர்க் கியல்பென் றுரைத்தனரே
உற்றபசு வானதுவு மோர்கன்றை யேயீனும்
பத்தான குட்டிகளைப் பயிலும் பெருங்கிரிதான்
கோரமது செய்வதற்குக் கொம்பிருந்து மேபசுக்கள்
வீரமில்லாச் சற்குணத்தால் மேன்மைமிக வுண்டாகி

வங்கிஷமும் விர்த்தியாம் வன்புலியின் கோரத்தால்
பங்கமுறு குட்டியது பத்தின்றும் விர்த்தியில்லை
நன்மைதின்மையிரண்டுமிந்த நாட்டினுக்குத் தாட்சியதாய்
உண்மை யிதுவேயென் றுரைத்தார் மனுநூலோர்
தெய்வத் தரிசனங்கள் தெய்வ விசுவாசம்
பொய்யான தானதவம் புத்திரர்க ளோடுணவு
பெரியோர்கள் சேர்வைகுலப் பெண்ணு ளனுபோகம்
குறையாத செல்வமுநோய் கொள்ளாத தேகவிர்த்தி
தன்மையுட னீன்ற தாய்தந்தை செய்தவமும்
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்
வித்வான்க ளானவரு மெய்ஞ்ஞான முற்றவரும்
வெற்புப் புலிநகமு மேன்மையுள்ள பூணமதம்
காரானைத் தந்தங் கவரிமான் றன்மயிருஞ்
சீரான வாறினெங்கே சென்றாலு மேன்மையுண்டாம்
நாயா னதுசினந்து நமைக்கடித்தால் நம்முடைய
வாயா லதைக்கடிக்கும் வாறுமுண்டோ வையகத்தில்
அழிவில்லா மூட ரனேகமாய் வைதாலும்
பெரியோர்கள் வாய்திறந்து பேசா ரொருக்காலும்
சற்குணத் தாலே தருமமது வந்தெய்தும்
துக்கம்வ ராதவர்கள் துடங்கினதுங் கைவசமாம்
தாரித்தி ரமுமில்லை தக்கோர் பயமுமில்லை
பாரிற் புகழ்விளங்கும் பரகதியு முண்டாகும்

நற்பிறவி துற்சனர்.

எண்ணாமல் யாதொன்று மியார்க்கு மிடர்செய்வார்
எண்ணாமற் கொலைகளவு மிறைச்சிமுத லானதுண்பார்
பொய்யுரைக்க வஞ்சார் போசனமுஞ் சாலவுண்பார்
எய்யாப் பசியுடையா ரிராட்சத கணமாவார்
அஞ்சா தழிவழக்கு யாவரையு மேமருட்டி
வஞ்சனையில் லாரை வலியாரை வெல்லவல்லார்
இராப்பகலு மாறாமல் ஏந்திழையர் தமைப்புணர்வார்
சாப்பாட் டொழுக்கமுடன் தம்முடம்பு சுத்தியில்லார்
மாதலத்தி லிந்த வன்னெஞ் சுடையவர்தாம்
பூதகணம் பேய்க்கும் புறம்பகர்வ ரென்றனரே

கொம்புளதுக் கைந்துமுழங் குதிரைக்குப் பத்துமுழம்
அன்பான யானைக்கோ ராயிரமு ழத்தினப்பால்
வண்டிகண்டா லைந்துமுழ மாறிடுவர் துற்சனரைக்
கண்டவுடன் காதவழி கடந்தப்பா லோடனலம்
பாம்புமுத லானவைக்குப் பல்லதனி லேவிஷமாம்
வீம்பான தேள்தனக்கு விஷமதுவும் வாலினிலே
துற்சன ரானவருத் தொட்டிடமெல் லாம்விஷங்கள்
மிச்சமென்று சொல்லி விதித்தார் மனுநூலோர்
வேம்பிற் கசப்பும் மேவா மருக்கொழுந்திற்
சோம்பா மணமிரண்டுந் தோன்றும்போ துண்டான
வாறுபோல் துற்குணமும் வாய்ந்தபுகழ் நற்குணமும்
எறு பிறப்பிலன்றி யிடையிலொன்றும் வாராது
நாய்க்குநல்ல போசனமும் நற்பணியுந் தான்பூட்டி
எற்கனவே தண்டிகையி லேற்றிவைத்துப் போனாலும்
கண்ணில் மறுநாயைக் கண்டவுட னேகுலைக்கும்
வண்ணம்போல் துற்சனற்கு வாராது நற்குணந்தான்
எல்லாருந் தூஷனிக்க வெல்லார்க்குங் கோளுரைப்போன்
பொல்லாத காற்றிற் புகைந்தெரியு மக்கினியாம்
பொல்லாரைக் காண்பதுவும் பொல்லார்சொல் கேட்பதுவு
பொல்லார் குணமுரைத்த போதிலே தீதாகும் [ம்
தர்மந் தனைநினையார் தக்க பழிக்கஞ்சார்
கர்மியவர் வாழ்வுவெகு காலநிற்க மாட்டாது
தலங்கள் தனைத்துதியார் தர்ம கதைகேளார்
துலங்கு நதியாடார் சுவடிவா சித்தறியார்
வாசமிகு கீர்த்தியுள்ள மானிடசென் மங்களிலே
நீசப் பிறப்பிவரை நேத்திரத்திற் பார்க்கவொண்ணு

ங்றை

தங்க முருக்கிடினுந் தன்னொளிவு மங்காது
சங்கதனைச் சுட்டாலுந் தன்னிறமும் போகாது
சந்தனத் தையுரைத்துச் சலத்திற் கரைத்திடினும்
விந்தை யுறுமணமும் விட்டகன்று போகாது
சாணையிலே மாணிக்கந் தகர்த்துமிகத் தேய்த்தாலும்
காணு மொளிவுமொருக் காலுமது மங்காது

பால்முறியக் காய்ந்தாலும் பண்புசுவை குன்றாது
ஞாலமதி லிவ்வாறு நல்லோர் பெரியோர்க்கும்
ஆதார மின்றியென்ன வாபத்து வந்தாலும்
நீதி வழுவார்கள் நிறையுந் தவறாரே
ஊரார் பொருள்மே லொருபோது மாசைவையோர்
பூராய மான புருஷோத் தமனிகராம்
தன்னுடைய தொன்றுந் தரமாய் விளம்பார்கள்
சின்னமொன்றுஞ் சொல்லாதார் தெய்வப் புருடனென்பார்
சார்ந்தவரைக் காப்பார்கள் தான்புருட னுயிருந்தும
ஏய்ந்த மனமறிந்தொன் றேற்காதர் புருடரத்னம்
வாரா வறுமைமிக வந்தாலு மற்பர்களைப்
பாராரே சேரார் பண்பார் புருடசிங்கம்
தாய்தந்தை யானாலுஞ் சமன்செய்த கோலதுபோல்
ஞாயமுரைப் போர்புருட நாயகமென் றேயுரைப்பார்

ஈகை

ஆறுவற்றி னூற்றூறும் அண்டம் விளக்கிவருஞ்
சூரியனை ராகுவந்து சூழ்ந்திடினும் வெய்யிலுண்டாம்
நல்லமதி தேய்ந்தாலும் நல்வெளிச்சம் கொஞ்சமுண்டு
கொல்லைபா ழானாலுங் குருவிக் கிரையுமுண்டு
இவ்வகைபோ|லீவோருக் கேதிடர்கள் வந்தாலும்
எவ்வளவு மீய்வதல்லா லில்லையென்று சொல்லாராம்
எடுக்கெடுக்க வூறு மிசைந்தமணற் கேணியைப்போல்
கொடுக்கக் கொடுக்கமிக்க கூடும் பெருஞ்செல்வம்
வந்தவிருந் துக்களித்து வரும்விருந்து பார்த்திருக்கும்
சிந்தையுடை யோர்கள் தேவரிலு மேயதிகம்
தாரித் திரத்தார் தயவில்லார் தம்மிடத்திற்
கூறினு லேதுங் கொடுக்கா ரிகழ்ச்சிசெய்வார்
ஈயுமு தாரனத்தா னெப்போதும் வேணுமென்று
வாய்திறக்க வேண்டா மனதறிந்தே யீவானும்

ஈகைக்கிடையூறு.

தேனிடத்தி லீயுமுண்டு ஜலத்தில் முதலையுண்டு
மானிலத்தின் வீடுகளில் வரவிடா நாய்களுண்டு

சந்தன மரத்தி னடியிலே சர்ப்பமுண்டு
கெந்தமிகு தாழம்பூ கிள்ளவென்றால் முள்ளுமுண்டு
கொடுக்குந் தியாகிகள்பால் கொடாமலிடை யூறுசொல்லித்
தடுக்குங்கு லாமரங்கே தானுமுண்டே கண்டீரே
குற்ற முரைத்துக் கொடுப்போர் தமைக்கெடுப்பார்
சுற்ற மழிந்துவிடும் சோறுநஞ் சாகிவிடும்

சினேகம்.

மதியி லுறுமுயலு மதிவளர்ந் தால்வளருஞ்
சதிராகத் தேயுநாள் தானுமது தேய்ந்திடுமாம்
வாவிதனிற் கொட்டிமலர் மன்னீர்போற் றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர் புற்பூடும் வளருமதி லேமடியும்
சேரும் பெரியோர் சினேகமிவ்வா றாகுமென்று
கூறுமனு நீதிக் கொள்கையிது வேயாகும்

சரீரசுகம்.

ஏற்ற புதன்சனியி லெண்ணெயிட் டேமுழுகிக்
காற்றுப் பனிவெய்யில் காயார்கள் மெய்வருந்தார்
ஓயா வழிநடக்கா ருணவுபல கால்விரும்பார்
காயா வதுகிழங்குங் கனியுமிகத் தின்னார்கள்
தன்வயதின் மேலான தையலுட னேசேரார்
உண்மைப்பசி யன்றி யுணவுசற்று முண்ணார்கள்
மலநீ ரடக்கார்கள் மடப்பளியி லேயிருக்கார்
நலமாய்ப் பழங்கறியை நாடார் பலநாளும்
காய்ச்சுபால் நெய்மோரைக் காலமுந்தான் சேர்ப்பார்கள்
ஏச்சில்லா வழுக்கை யிளநீர் மிகுந்துண்பார்

ஆறுதிங்கட் கொருவிசைதா னுனவி ரோசனமும்
நாரியரை மாதமொன்றிற் கிரண்டுவிசை நத்துவராம்

உண்டபின் தண்ணீரு முன்பா ருலாவிடுவார்
இரண்டுபத் திரண்டுமிந்த வியனிலையுள் ளார்தமக்கு

ஏற்கு முடல்தனிலே யெப்பிணியும் வாராது
தீர்க்கா யுசுண்டாம் சேமமென்று செப்பினரே

மாறுபா டில்லாமல் வயிறறிந் துண்பவர்க்கு
நூறு வரையுடலி னேயணுக மாட்டாதே

### நோயணுகல்.

கல்லால் மயிராலுங் கடிய நடையாலும்
நெல்லா லுமியாலு நித்திரையில் லாதாலும்
ஒழியாவி சாரத்தா லுண்டபின்பு மூழ்கையினுல்
கழியு மலசலங்கள் கக்கிஷமாய் வீழ்கையினுல்
பின்னு மடக்குவதால் பெருத்தசுமை சுமத்தலினுல்
மின்ன ருடன்புணர்ச்சி மிகவும் விரும்புவதால்
வெய்யவன்மூன் வேலையினுல் வேர்வை பனிக்காற்ருல்
வெய்யவிள வெய்யில் விரும்பல் கனியுணவு
ஏற்குங் கிழங்குசரு கிலைவிரும்பி யுண்ணுவதால்
பார்க்குள் வியாதிவரும் பாதையிது வென்றுரைப்பார்
காலை யிளவெயிலிற் காய்வோர் பிணமதனின்
மேலே வரும்புகைதம் மேலே படுவோர்கள்
தன்வயதுக் கேமூத்த தையல் தனைப்புணர்வோர்
தன்மை யுடனிரவில் தயிர்வார்த்தே யுண்பவர்கள்
நால்வ ரிடந்தனிலே லட்சுமியு நில்லாளாம்
மேலுமவ ராயுள் விழலாகப் போகுமென்ருர்

### இறந்து மிறவாதவர்.

பார்க்குள் விளங்கப் பலதர்மஞ் செய்தவர்கள்
மார்க்கமிகு கற்புடைய மாதைமணஞ் செய்தவர்கள்
தேவா லயமுதலாய்த் திருமடங்கள் கட்டினவர்
பூவா னதுவிளங்கப் புனலாலுண் டாக்கினவர்
வழியோ ரிருக்க மனைகட்டி வைத்தவர்கள்
தரையாண்ட நீதிமன்னர் சற்புத்ர ரைப்பயந்தோர்
காவியஞ் செய்கவிஞர் கவிமாலை சூட்டினவர்
பூவுலகி லோயாமல் பொருள்கொடுத்த மாந்தர்களும்
சிரான கோபுரங்கள் செய்து முடித்தவர்கள்
சூராதி சூரர் துலங்குபதின் மூவர்களும்
வாகா யிருந்தாலும் வையகத்தி லூழிமட்டுஞ்
சாகாத பேர்சொர்க்கத் தலமீ துரைபவராம்

### இறந்து மிறந்தவர்.

நெடுநாள் மருகன்மனை நீங்கா திருந்தவரும்
அடைவா மருமகன்மா ரம்மான் மனைதனிலே

சதமா யிருப்பவரும் தமிழறியா மூடருமே
இதமாய்க் கவிபாடி யிரக்கப்போம் வாணர்களும்
மாறா வறுமையுற்ருேர் வல்ல மருந்துசெய்தும்
தீராப் பிணியாளர் சிவிகைசுமந் தேபிழைப்போர்
மனைவி தனைவணங்கி வயிறு வளர்ப்பவரும்
நினைவுதடு மாறியுள்ளம் நீங்காக் கவலையுற்ருேர்
சொற்சோர்வு பட்டோருஞ் சொந்தமில் லாப்பொருட்கு
மிச்சமாய்ப் பேசி வீண்வழக்குச் செய்பவரும்
மனைவிதனக் கஞ்சி வந்தவிருந் துக்கொளிப்போர்
முனையான ராசசபை மூடராய்ப் போனவரும்
ஈரேழுபேரு மெண்சா ணுடல்படைத்தும்
சீர்கெட் டுயிரோடே செத்தபிண மாவார்கள்
சம்பத் துடன்பிணியில் தான்மெலிந்து வாழ்வதிலும்
துன்பமற்றே பிச்சைகொண்டு சுற்றல் மிகவுநன்ரும்
ஆன திருமா தகன்று வறுமைவந்தால்
ஞானம்போங் கல்வியும்போம் நாடும் பழித்திடுமாம்
தாய்பழுது சொல்வாள் சபையேற வெட்கமுமாந்
தூயமனை யாளுந் துரும்பாய் மதித்திடுவாள்
மெய்சொன்னுற் பொய்யாகும் விசாரமும் போகாது
உய்ய விருந்துவரி லுயிரோடே செத்தபிணம்
மேன்மை யகன்றுகுல வித்தைநல மற்றுளதும்
போமே யிதற்கிசைந்து போவதுவே மெத்தநலம்
தேனின் மருந்தெய்துந் தீரா வியாதியுற்ருல்
மாநிலத்திற் ருனுக மாளுவதே யுத்தமமாம்

### பொருளின் பலன்.

பொருள்தேடத் துக்கமதைப் போற்றிவைக்கத் துக்கமதாம்
பொருளைச் செலவழிக்கப் போம்போதுந் துக்கமதாம்
காகத்தின் கூட்டில் கருங்குயில்கள் முட்டையிட
மோகமுடன் காகமுந்தன் முட்டையென் றேயெண்ணுதல்
ஈய்க்கள்தேன் கூட்டில் யெடுப்பா ரிடங்கொடுத்து [போல்
போயலை கின்றதொரு புத்தியீ னம்போலும்

சோரத்திற் பெற்றபிள்ளை சொந்தமென்று முத்தாடி
பேரிட் டழைக்கின்ற பேடி தனைப்போலும்
மயலாகத் தேடியே மண்ணிற் புதைத்தபொருள்
அயலார் பொருளுமல்ல வவன்பொருளு மல்லவென்பார்
உற்றபொருள் தேடமன முற்றூ லுலகமுமே
நற்றூய ஞானிக்கு நாடெல்லாந் தன்னடிமை
பொன்னறியா மூடரிடம் பொருளதுவுஞ் சேர்ந்தாக்கால்
மன்னு குரங்குக்குகை மாலைபோல் கொண்டலைவார்
பொன்னுசை யுள்ளவர்க்குப் போசனத்தி லிச்சையில்லை
அன்னைசுற்றந் தர்ம மானதிலு மிச்சையில்லை
வெட்கமில்லை போகலாம் வேளையின்ன தென்றுமில்லை
இக்குணமுள் ளார்பேய்க் கிணையாகு மென்றனரே

பொருள் வகை

மெத்தவுந்தா னேகுவித்து வீட்டில்வைத்த நெல்லதனை
நித்த மெடுக்கிலிந்த நெல்லுமற்றுப் போவதுபோல்
ஏல நமக்கு மெழுத்தி னளவாக்கும்
ஞால மிசையிரவி நாழிகைபோல் நாளாகி
மாச வருடமென்று மன்னுந் தொகையாகி
மோசமாய்க் கொல்லு முறைமை யறியாமல்
இன்னநெடு நாளிருப்போ மிதுவே சதமென்று
பொன்னைமிகத் தேடிப் புதைத்துவைக்கு மாந்தர்களைச்
சீதேவி பூதேவி சிரிப்பளிவன் றேனீயம்
மூதேவி சென்மமென்று மொழிந்தார் மனுநூலோர்
தக்கதர்மம் பொருளின்பஞ் சாருமிந்த மூன்றினிலே
நற்குணத்தால் தேடுபொருள் நலலறமு மின்பமுமாம்
வஞ்சனையாய்த் தேடுபொருள் மாய்க்குமதே யாகாது
எஞ்சும் பழிபகையா மென்பதனை யுண்டாக்கும்
கூத்தனைப் பார்க்கவந்து கூடுஞ் சனம்போலும்
ஆற்றுக்கால் நீரபோ லைசுவரியங் கூடிவரும்
கூத்து முடிந்தவுடன் கூடுஞ் சனங்கலைந்த
மாற்றம்போ லாய்விடுமே மாண்டபெரு ளுள்ளதெல்லாம்
புண்ணியமெந் நாளும் புகழாக நிற்குமல்லால்
மண்ணிணிலென் றைக்கும் வாழ்வுநிற்க மாட்டாது

நல்லறிவு கயவர்.

தன்னைப் புகழ்வோருந் தாய்தந்தை யைப்பேணார்
அன்னைசுற் றம்விலக்கி யயலாற் குதவுபவர்
மேலோர்சொற்கேளாதோர் வேசைசத மென்றுரைப்போர்
பூலோகத் தொப்பனையைப் பொய்யென் றுரைப்பவரும்
கண்டா லுறவாடிக் காணு விடஞ்சலிப்போர் [பவரும்
கொண்டபெண் டாட்டிசெய்யுங் குறையைவெளிச சொல்
பொய்ச்சாட்சி சொல்வோர் போற்றிவைத்துப் பிச்சைகொ
தையல்சொற் கேட்பதுவுஞ் சபையில்பயனில்லா [ள்வோர்
வார்த்தை யுரைப்பவரு மற்றுமிந்தப் பன்னிருவர்
பார்த்தால் மனுசப் பதராம் பசாசிவரே
அக்கினியைக் கட்டால மகலாநோய் தீர்த்திடலா
மிக்கதொரு கஷ்ட மிருக மிணக்கிடலாம்
வல்லவிஷந் தீர்த்திடலா மாண்டோர்க் குயிர்தரலாம்
வெல்லரிய பேய்தனையு மிரட்டியே யோட்டிடலாம்
பறவைமிரு கம்பேசப் படிக்கவுமே செய்திடலாம்
வரப்போகச் செய்திடலாம் மறலியுடைத் தூதரையும்
மணலைக் கயிறாக்கி வைக்கலாங் கயவர்களின்
குணமத னைத்திருப்பக் கூடாது கண்டீரே
வெல்ல மிதக்கவித்து வேம்பின்விதை யைப்பதித்து
நல்லதொரு பாலூற்றி நாளும் வளர்த்தாலும்

புல்லறிவு கயவர்.

சாதிகுணங் காட்டுந் தகமைபோல் புல்லருக்கு
ஏதுரைத்துஞ் சற்குணங்க ளெள்ளளவும் வாராது
செல்வமது வந்தவுடன் தெய்வந் தனைநினையார்
சொல்வரம்பு சற்றுமிலை சுற்றந் தனைநோக்கார்
தர்மந் தனைநினையார் தக்கபழிக் கஞ்சார்கள்
கர்மியிவர் வாழ்வுவெகு காலநிற்க மாட்டாதே
உண்டென்று நாலுமுலக முறைப்பதனை
திண்டுமிண்டா யில்லையென்று செப்புமவர் பேயெனலாம்
தோலெலும்பு தின்னுநாய் சோறுநெய்யு முண்டாக்கால்
சீல முடவயற்றிற் செறியாத வாறதுபோல்

சண்டாள ரானவர்க்குத் தர்மநூ லானதனை
விண்டா லவர்செவியில் வீழா தொருநாளும்
புலிக்கஞ்சி யோர்வேடன் போய்மரத்தி லேயேற
வலுக்குரங்கு கண்டு வந்தவனை யாதரிக்க
ஞானிக் கிகழுமில்லை நாட்டிலோர் சாதியில்லை
ஈனமி லோச்சர்களுக் கெப்போது நிரைவுமில்லை
காமிக் கொருவரம்பு கருத்த முறையுமில்லை
மாமிக்க யோகிக்கு வஞ்ச வினையரில்லை
சித்தசுத்த பூசைக்குத் திகழுமங்க சுத்தியில்லை
விந்தைபுகழ் வாணருக்கு வேற்றுமைய ராருமில்லை

புல்லறிவு.

கள்ளருக்குற் றாருமில்லை கபடருக்கு ஞானமில்லை
எள்ளளவும் துன்பங்க ளேதுசுத்த வீரனுக்கு
பொய்யனுக்குச் சாட்சியில்லை புலையருக் கிரக்கமில்லை
ஐயோவி யோதிக்கிங் காயதொரு நேயரில்லை
தான்பிடித்த தேபிடியாச் சாதிப் பவன்குரங்கு
ஆனசபை யிற்குறிப்பை அறியாதான் பட்டமரம்
எளியா ருடனெதிர்ப்போ னேற்ற தடிநாயாம்
பழிபாவத் துக்கஞ்சான் பசாசாகு மென்றனரே
வந்தோர் முகம்பாரான் வனத்திலிருக் குங்கரடி
பந்த முறுசபையிற் படுப்போன் கிடாமாடு
அடுத்தோர்க் கிடர்விளைக்கு மவனே கொடுந்தேளாம்
பிடித்தப் பிடியைவிடாப் புலவன் வலிசரை
சற்றெனினுங் கல்விகற்றுச் சபையிற் படிக்கறியான்
புற்றில் விழுந்துபட்டுப் போனதொரு காட்டுமரம்
தன்புத்தி யன்றிப்பிறர் சாற்றுபுத்தி கேளாதான்
வன்புற்ற வானரமாம் வாய்பேசா வூமையென்பார்
அம்புவியை யாளுமரசர்பகை யைப்பெற்றோர்
கொம்பிழந்த மந்தி கூகையுற வானபட்சி
கொட்டுந்தேள் போல்தீராக் கோப முடையவன்றான்
குட்டியிட்ட நாய்கரடி கொடிய வனமிருகம்
மருங்காய்ப் பெரியோரை வந்தனைகள் செய்யாதான்
கருங்கலலி லேயடித்துக் கைகால் வகுத்தசிலை

## பண்டிதாள் பரிட்சை.

முக்கியஞ்சேர் நூலின் முறையும் நிறையறிந்து
பக்குவமுள்ள நாடிப் பரிட்சை தனையறிந்து
தேடியழைத் தார்பின்போய்த் தேகங் குணங்காலம்
பாடுகின்ற நாடிநிலே பரீட்சைகளுந் தானறிந்து
சிந்தாத வாதபித்தச் சிலேற்பனத்தின் கூறறிந்து
வந்த பிணியும் வலுவு மிகத்தெரிந்து
கற்பங் கியாழங்கள் கனகுளிகை பற்பமுடன்
தக்கதொரு செந்தூரந் தயிலமுடன் சூரணமும்
இவ்வகையாய் லேகியமு மிதமறிந்து தான்கொடுத்து
அவ்வகையிற் பத்தியமிக் காகவே வையாமல்
எளிதான பத்தியத்தி லெப்பிணியும் நீக்குவித்துத்
தெளிவான வாரோக்கிய ஸ்நானமிகச் செய்வித்து
தந்ததே போதுமென்று தான்மகிழும் பண்டிதனைச்
சந்ததந் தேவர்பதி தன்வந் திரியெனலாம்
மிக்கபிணி வந்தால் வேணபொருள் தாரேனென்று
மிக்கதுல தெய்வம்போல் மேன்மைமிகச் செய்வார்கள்
உற்றபிணி தீருமென் றுறுதிசொன்னு லேகுருவாம்
சற்றே மருந்துசெய்யில் தந்தையென்று சொல்வார்கள்
பாதி லகுவானுல் பண்பிற் றமையனென்பார்
பாதியுந் தீர்த்துவிட்டாற் பரிகாச மைத்துனனும்
ஏதுபொருளானுலு மீவது முன்னேயனும்
காதலுடன் மற்றுநாள் கடனுளி யாவானே
அப்பாற் பகையாளி யாவார்கள் பண்டிதர்கள்
இப்படிச்செய் லோப ரிருப்பா ருலகினிலே
தீராத நோயருமை செப்பாத பொய்யரிடம்
வேறான பண்டிதரை மேல்மருந்து கேட்பரிடம்
மூர்க்க ரிடத்தினிலு மொய்குழலா ளேப்பிரியா
தோர்க்கு மவரிடத்து மூலோபியர்கள் தம்மிடத்தும்
கத்துந் துரோகியர்கள் கண்டதெல்லா முண்போர்கள்
பத்தியத்தைத் தாழ்வுசெய்யும் பண்பில்லா மாந்தருந்தான்
மட்டில்லாப் பொன்னையள்ளி மாரியென யீந்தாலும்
எட்டியடி வைப்ப தியல்பல்ல பண்டிதற்கே

சுத்தம்.

வெண்ணீ றுடன்துளசி வில்வ மருச்சுகந்தம்
பண்ணும் புதுப்பாண்டம் பழவர்க்கங் காயிலைகள்
சென்னெல் தவசமுடன் செம்பிரும்பு வெண்கலங்கள்
பொன்னுடன் வெள்ளிமுதல் பூணு நவமணிகள்
கோதில்லா வெண்பட்டுக் கோடித் துகில்லயாவும்
பாதரட்சை யாவதுடன் பத்தென்ப திவ்வகைகள்
கீழோர்பா லுற்றிடினுங் கீழோர்க வீந்தாலும்
தாழ்விலா மேலவர்கள் தானிதனை யேற்றிடலாம்
ஆசைமிஞ்சு மின்னு ரதராபா னத்திற்கும்
பேசரியாப் பாலர்கள் பெய்தசிறு நீரதற்கும்
வேட்டையிலே நாய்கடித்து விட்டிட்ட மாமிசமும்
தேட்டமுடன் பட்சிகள்தான் தின்ற பழங்களுக்கும்
இந்தவகை நாலுக்கு மெச்சியில வென்றுசொல்லி
முந்தமனு நூலின் முறைமை யுரைத்தனரே
எத்தொழிலு மெக்கலமு மிழிவுண்டே யல்லாது
சுத்தமது வென்றெவருஞ் சொல்லுதற்கு நாவுளதோ

ஆகாமை.

மன்னர் பகையு மாதவத்தோர் தம்பகையும்
வின்னக் கொலைஞர் விகடப்பிர சங்கிபகை

ஊரார் பகையுமுற்ரு ருடன்பகையும்
வீரான் மந்திரிபகை மிகுந்தபணக் காரர்பகை

வல்ல கணக்கர்கவி வாணர் குருபகையும்
வல்லமைசேர் பண்டிதர்கள் மந்திர வாதிபகை

பெற்றபிள்ளை பெண்சாதி பின்னவர்கள் முன்னவர்கள்
உற்றபதி னேழி லொருபகையு மாகாதே

ஆறடுத்த வூறதுவு மரசரிடஞ் சேவகமும்
நீரில் விளையாட்டும் நெடுவெள்ள நீந்துவதும்

தாசி யுறவுமயற் ரூரமின்னுர் நேசமதும்
நேசமில்லாத் தாயாதி நேசமதுந் துற்சனர்கள்

தன்னே டிணங்குவதுஞ் சத்ராதி நடபதுவும்
பன்னகத்தை யாட்டுவதும் பகடு நடத்துவம்

வெய்யிலெங்கும் போதினிலே மின்னுருடன்புணர்ச்சி
மையிருளி லேதனித்து வழிபோகும் வல்லமையும்
நஞ்சுடனே தீமருந்தில் நாளும் பழகுவதும
அஞ்சாம லெப்போது மலகைகளை யோட்டுவதும்
ஆர்க்குங் கடலோட மதிலேதான் சஞ்சரித்தல்
பார்க்குமது வுண்ணல் பலநாள் களவுசெய்தல்
இத்தகையாய்ச் சொன்ன திருபதையு மேமனதி
லுற்று விடறுண் டுயிர்க்குலய மாமிதுவே
ஈருர் பயிரிடுவோ ரில்லா ளிரண்டுடையோர்
ஊரார்போம் பாதையதி ஞேரம் பயிரிடுவோர்
பிணைபட்டுப் பொய்ச்சாட்சி பேசு மிவர் நால்வர்
சுணைகெட்ட பேரிவர்கள் துன்பத்திற் குள்ளாவார்
சிற்றூர் குடியிருப்போர் சீர்கெட்ட பெண்டுடையோர்
பெற்றபிள்ளை யிற்றிரளாய்ப் பெண்ணுக பெற்றவநும்
அற்பனைச்சே விப்பவரு மலேக்கழிந்து போவதல்லாற்
சொற்பச் சிலநாளில் தொந்தரைக்குள் ளாவார்கள்
அத்திக்காய் கோவக்கா யைவிரலி தேற்றுங்காய்
சுத்தவெள்ளைக் கத்திரிக்காய் சோற்றுக்கா யாமிவைகள்
தின்பார்க் கொருநாளுந் தேவபக்தி யில்லையென்று
முன்பாக நூலோர் மொழிந்தார் மனுநூலில்
துறந்தோ ரடங்காதார் சூதர்பிணி யோர்களையும்
புறம்பேசும் வஞ்சகர்கள் பின்னவர்கள் பெண்டுகளும்
கல்லா தவன்நெஞ்சிற் காணுமிவ ரெண்மரையும்
நல்ல சபையிலொரு நாளுப்வைத்துப் பேசவொண்ணு
ஆசனங்கள் தான்போடி லாயுளது விர்த்தியில்லை
போசனமிட் டுண்ணூர்க்கும் போமே அயிஸ்வரியம்
தனக்கெண்ணெ தான்தேய்த்தாற் சந்ததிகட் காகாது
அனர்த்த மிதுமூன்றென் றருளினர் முன்னோர்கள்
யோகியொரு போதே யுண்பா னிருபோது
போகியுண்பான் மூன்றுபோ துண்பான் புசிப்பில்லான்
உடனுடனே நான்குபோ துண்ணு மவன்றனக்கிங்
கிடையூறுண் டாகுமென் றியம்பினர் முன்னோர்கள்

வீரத்தி லொப்பில்லா விக்கிரம னானாலும்
வீரியமும் வாழ்வும் விளம்பிடவு மாகாது

வேந்தர்குரு பொய்யர் மேன்மையுள்ளோர் கோபிகட்கும்
வாய்ந்த கடன்கொடுத்து வாங்குவது நீதியல்ல

நாட்டுக்கா காதவரை நமக்கடங்காப் பெண்டீரை
மீட்டுமந்த ராசனுக்கு மேலான மந்திரியை

துற்சனர்சி னேகமதைத் தொட்டா லசையும்பல்லை
இட்சணமே யைந்து மெடுத்துவிட வேண்டுமென்பார்

கடன்பட்டுத் தீத்தோர்தங் கைச்சீட்டி லேசேஷம்
விடந்தீண்டி மீண்டதிலே யெள்ளளவு மேசேஷம்

அக்கினியில் வெந்த அகந்தன்னி லேசேஷம்
மிக்கான சத்துருவை வெல்லுவதி லேசேஷம்

தெய்வப் பிரார்த்தனைகள் செய்து மதில்சேஷம்
உய்ய பிணிக்குமருந் துண்டலே பின்சேஷம்

காணிபோய் மீண்டதிலே கடுகளவு மேசேஷம்
ஆணியாம் எழு மனுவும்வைக்க லாகாது

பயனில்லாமை.

சந்திரனில் லாவானஞ் சற்சனரில் லாதவூர்
மந்திரியில் லாவாசல் மதகரியில் லாதவெம்போர்

மக்களில் லாதசெல்வ மதுரமில் லாதகவி
தக்க தளபதிகள் தாமில்லா வெஞ்சேனை

பெண்ணரில் லாதமனை பிறவியில் லாதவுடல்
விண்ணணப் பாடல் வினையமில் லாவேசி

கோப்பில்லாக் கூத்துடனே கொங்கையில்லாப் பெண்ணழ
தாப்பில்லாச் சேவனங்கள் தந்தியில் லாவீணை (கும்

பத்தியில் லாப்பூசை பாத்திரில் லாதபுரம்
சத்தியமில் லாதவாய் தானறியா வாணிபங்கள்

சந்தமில் லான்பாடல் தருமழகில் லாதகவி.
நந்தாப் புனல்சேர் நதிவளமில் லா நாடு

தேசிகனில் லாதவித்தை தியானமதில் லாத்தீட்சை
பேசரிய நல்லறிஞர் பெரியோரி லாதசபை

குடித்தனமில் லாநாடு குணமில்லாப் பெண்ணசை
வெடுத்துற்று வாசமின்றி வீண வுதிர்மலரும்
சேகரமில் லாதகதை தீபமில் லாதமனே
சூகரம்போ லுண் ணுகின்ற சுசியில்லாப் போசனமும்
கல்வியில்லாத் தேகங் காசினியி லாகாவே
வல்லவிவ் வெண்ணன்கில் வரும்பயன்க ளொன்றுமில்லை
தந்ததே போதுமென்று தான்வாங்கா வேதியனும்
வந்ததெல்லாம் போகுமென்று வாங்குகின்ற ராசாவும்
வெட்கத்துக் கஞ்சுகின்ற-வேசையரும் வெட்கமில்லா
மிக்ககுலப் பெண்டீரு மேன்மையில்லை கஷ்டம்வரும்
அன்னையிறந் தாற்சுவையூ ணனைதெலாம் நட்டமாம்
பின்னைப் பிதாவிறந்தால் பேரான வித்தைநட்டம்
உற்ற துணையிருந்தா லுடலிலே பாதிநட்டம்
மற்றுமனையாளிறந்தால் மாண்டவெலாம் போனதென்பார்
பருவம்போய்ப் பாபம் பண் ணுவிக்கும் வித்தைகளும்
பெரிய கிழவனுக்குப் பெண்டிளமைப் பெண்ணளும்
அத்த தரித்திரருக் கழகுடைய பெண்டீரும்
இத்தகய மூன்றினிலு மெய்தும் பயனில்லை
வாரியிலே பேய்ந்தமழை வயிறுபசி யில்லாத
பேர்களுக்கும் போடுணவு பிசாசுக் கிடும்பூசை
பொன்னுள்ளோர்க் கீய்ந்தபொருள் போதாவிந் நான்கினி
என்ன பலனுமில்லை என்றனரே முன்னுலோர் (லும்
அந்தணர்க்கு மாவார்க்கும் ஆபத்தி லேயுதவார்
இந்தவுலகி லிருந்தென் னிறந்துமென்ன
யார்க்குமுரை யாதவித்தை யனேக விதமாகப்
பார்க்குள் படித்தென் படியா திருந்துமென்ன
என்ன கறிசுவைக ளினிதா யிருந்தாலும்
பொன்னுவின் நெய்யில்லாப் போசனமும் திருப்தியல்ல
தன்னல் நிருவகிக்கத் தகாத விரதமுற்றுல்
என்ன பலனுமில்லை யிடறல்வரு முத்தியல்ல
தருண மறிந்துதவாத் தன்மைசேர் நண்பாளர்
அருமையாய்ப் பின்னுதவி னுலுமுத வாதுமென்ன

வாலிபத்தி லெய்தாத வடிவுடைய பெண்ணும்
சாலவிருத் தாப்பியத்திற் சார்ந்தென்ன நீங்கிலென்ன
புருஷனில் லாவிதவை பொன்னுடை யாபரணம்
வரிசை யுடனணிந்தால் வையகத்தோ ரேசுவர்கள்
பெற்றதா யில்லாத பிள்ளைதனை யெவ்வாறு
வைத்து வளர்த்தாலும் வளங்கொடுக்க மாட்டாது
பல்லிலா தோருமற்றப் பசியுள்ளோ ரானவரும்
நல்லருசி காணுரென்று நவின்றூர் மனுநூலோர்
தெய்வதவங் குருமுறையுந் திருஞான சாஸ்திரமும்
வையகத்தி லேமருந்து மந்திரமோ டிவ்வைந்தும்
மெய்யென் றுரைப்பவர்க்கு மெய்யாய் விளங்கிநிற்கும்
பொய்யென் றுரைத்தாக்காற் பொய்யாகிப் போய்விடுமே
பாடுப டாமற் பலன்கொடுக்கு நற்பனைபோல்
நாடிக் கொடுப்பதுவே நன்ருகு முத்தமமாம்
சிலதுநாள் பாடுபட்டால் தென்னை மரம்பின்பு
பலந்தருதல் போல்கொடுக்கும் பண்பதுவே மத்திமமாம்
வருடமெல்லாம் பாடுபட்டால் வாழை யொருவிசைதான்
தரும்பலன் போல்கொடுக்குந் தர்ம மதர்மமுமாம்
தெண்டனையில் லாவேலை சேயரில் லாதமனை
கொண்டவனுக்குள்ளடங்காக் கொம்பனையா ளில்வாழ்க்கை
வண்ட ரிணக்கம் வறுமை தனிற்றேட்டு
மண்டலத்தி லிவ்வைந்தும் வளந்தரவு மாட்டாதே
மாரிகா ணுதபயிர் மக்களில்லா யில்வாழ்க்கை
ஏறிகுள மில்லாவூ ரிரவிகா ணுவனசம்
அன்னைகா ணுதபிள்ளை ஆவினைக்கா ணுதகன்று
பொன்னில்லாப் பூஷணங்கள் போசனமுண் ணுதவுடல்
காவுகா ணுதவண்டு கலைகள்கா ணுக்குமரன்
மேவு கொழுனனில்லா மெல்லியர்க ளானவரும்
தோழர்கா ணுநேசர் சோடுகா ணுப்பேடு
மீளுமதி காணுத வெண்குமுத மானதுவும்
பெரியோரில் லாதசபை பெண்டிரில்லான் றன்வாழ்வு
உரிய தியாகியில்லா வூர்பதினே ழாமிவைகள்

தாழ்வுதரு மல்லாது சாந்தவள மாகாது
வாழ்வுகா ணுவிளமை வாருகு மென்றிடுவார் [தாம்
நல்லோர்க்குச் செய்தநன்றி நாட்டில்வைத்த கையெழுத்
பொல்லோர்க்குச்செய்தநன்றி பொய்கையுறும்நீரெழுத்தா
சுற்றமுண்ணு யில்வாழ்வுஞ் சுதியில்லான் பாடுவதும் (ம்
கற்றறியான் பாடுகவி கைம்பெண்ணி லேயழகு
துற்குணத்துப் பெண்சாதி சொற்கேளாத் தன்னடிமை
மிக்கவிவை யாறும் வீணும் பலனிலையே
ஊமை செவிடர்களுக் குரைத்தவுபதேசம்
சேமமென்று பாவிகட்குச் செய்த வுபகாரம்
மேலு முவர் நிலத்தில் விதைத்தொரு நல்விதையும்
ஆலுமிவை மூன்றும்பே ராற்றிற் கரைத்தபுளி
குதிரைக்கு மாவுத்தன் கூறுமாவிக் குப்புலவன்
சதிரான வாயுதர்க்குத் தாந்தோர் சிலம்புமுமாம்
வேசைக்கு நட்டுவனும் விளங்குபல ராகமதற்
காசையாய்ப் பாடுவனு மைவருந்தா னில்லாட்டால்
ஏத்த லுடன்மதிலு மெழுதிவைத்த பெண்ணழகைப்
பார்த்து மகிழ்ந்துபோம் பண்பாம் பலனிலையே
தேவா லயஞ்சுற்றித் திரும்பாத தாள்தாளோ
தேவ தரிசனங்கள் செய்யாத கண்கள்கண்ணோ
பகவான் தியானமதைப் பண்ணுத சிந்தையென்ன
ஜெகமீது பகவானைச் சேவியாச் செங்கையென்ன
சிவன்மாலை யுந்துதிகள் செய்யாத வாயென்ன
சிவனு லயம்வணங்காச் சென்னியுமே சென்னியதோ
தினமும் புராணகதை தேராத தென்னசெவி
முனையான புண்ய நதி மூழ்காத தென்னவுடல்
ஏவுமிவை யெட்டு மில்லாதான் பாழ்செனனம்
பாவி யிவனிருந்தும் பலனில்லை வீண்பிறப்பாம்
தான மறிவுகொடை யாளி தனவானுய்
மானமிகு பூவலஞ்செய் வானுய் விவேகியுமாய்
மிக்கதொரு வித்வான் விளங்குகின்ற கீர்த்திமான்
உக்ரரண வீர னுபகாரி யென்றுசொல்லும்

இவ்வகையி லோர்பே ரெடுக்காத சென்மமவன்
இவ்வுலகினி லேமனித னென்றவனைச் சொல்லவொண்ணு
சீர்படைத்த வோர்மனுஷச் சென்மமொரு யோசனைக்குள்
பேரெடுக்கா விடின்மனுஷசப் பிறப்பிற் கழுதையுமாம்

லோபத்தனம்,

தேன்றுளியொன் ரூற்கடலைத் தித்திக்கச் செய்தாலும்
மேன்மை யுடன்மலையை மெழுகாகச் செய்தாலும்
பூவினுல் வச்சிரத்தைப் பொந்தாய்த் துளைத்தாலும்
மேவுங் கபடருக்கு மெஞ்ஞானம் வந்தாலும்
ஊமை படித்திடினு மூக்கமில்லாப் பேடிக்குத்
தாமோ தரான்வீரந் தைரியமுண் டாயிடினும்
நித்தங் கயவருக்கு நீதிமுறை வந்தாலும்
இத்தலத்தி லோபர்களுக் கீகைசற்றும் வாராது
தின்னுலுண் ணுமற்றேடி மிகச்சேர்த்து
புண்ணியமுஞ் செய்யாமற் போற்றிவைக்கும் லுத்தர்பொ
தெண்டப் பெரும்பிடிக்கும் தீக்குந் திருடருக்கும் [ருள்
வண்டமன வேசைகட்கும் வலுவந்தக் காரருக்கும்
இதமில்லாப் பேடிகட்கு மெல்லாப் பிசாசுகட்கும்
உதவுமே யீயா வுலுத்தர் பொருளதுகாண்
ஆகாப் பதரெனிலு மாரியவிபூ தியைவிளக்கும்
வாகாப் பழஞ்சுவரு மாடுறைஞ்சு முளமறைவாம்
மாடு கடவாதுவும் வையகத்தி லேயுழற்காம்
கூடப் பொதிசுமக்கக் கூடிவரு மேயதனுல்
செத்தபிண மானுலுஞ் சிறிதுஉப காரமுண்டு
புற்றதுவும் மண்ணுகும் பொங்கரவுக் கேமனையாம்
கல்லாலே யாலயங்கள் கனத்தபணிதியுண்டு
அல்லற் கழுதையென்ரு லழுக்குப் பொதிசுமக்கும்
வாருகோ லானுலு மாலிகையெ லாம்விளக்கும்
பேரார் குரங்கு பிடித்தார்க்கு குதவிசெய்யும்
ஈயாத லோபிகளா லெவர்க்கு முபகாரம்
வாயாத வர்கொடுக்க மாட்டா ரொருநாளும்
நெல்லிற் பதரென்ன நீரினிலே பாசியென்ன
நல்லமரத் தில்மொக்கு நன்ரு யிருந்துமென்ன

ஸ்ரீதேவி யாருடனே சீர்கேடி யானதொரு
மூதேவி தான்பிறந்து முக்கியமுண் டோவதனால்
தயவா யொருவயற்றில் சார்ந்த விவேகியுடன்
கயவர் பிறந்துமென்ன காரியமெல் லாஞ்சிதையும்
உச்சிதமா யார்க்கு முதவியில்லா தார்வாழ்க்கை
நச்சு மரம்பழுத்து நடுவூரில் தற்பதொக்கும்
செத்தபிணமதனைச் சிங்காரித் தாவதென்ன
கைததலத்தி னுலிழுத்துக் காட்டிலே போட்டுமென்ன
நாயா னதுகொழுத்தால் நாட்டிலதை யார்புசிப்பார்
ஈயர்த லோபியர்க்கிங் கெல்லா மிருந்துமென்ன
ஈகையில் லாதமைந்த ரிருந்தென் னிறந்தென்ன
ஆகையால் மிருக மதனிலே சேர்க்கவென்றார்

## இகழ்ச்சி யீனம்.

கற்பனையில் லாதகவி கயவருரை கேட்பதுவும்
விற்பனமில் லாரிடத்தில் வேண்டுங் கொடைபலவும்
ஆதரவில் லாதபெண்டீ ரருமையில் சேவகமும்
பேதைமக்கள் பேர்விளங்காப் பிள்ளைகளைப் பெற்றதுவும்
ஊழி வினையு முயர்கொடுமை யல்லாமல்
வாழ்வல்ல வீரைந்தும் வசையாகுங் கண்டீரே
நீர் நுழை யாவிடத்தில் நெய்நுழையும் நெய்நுழையாச்
சார்பிலே பால்நுழையுந் தானதுபோ காவிடத்தில்
மீறிப் புகைநுழையும் வெம்புகைபோ காவிடத்தில்
தாரித் திரனும் தவளு நுழைவானும்
தக்க தராதரங்கள் தானறியாப் பேரிடத்தில்
ஒக்கவிருந் துண்பதிலு மோடெடுத் திரத்தல்நன்று
தூயவறி வில்லாச் சுதரைப் பெறுவதிலும்
பேயதனைப் பிள்ளையாய்ப் பெற்று வளர்த்தல் நன்று
உள்ளன்பி லார்க ளுடனட்புக் கொள்வதிலும்
கள்ளுண் ணும் வம்பர் கழுதைகளை மேய்த்தல்நன்று

## வெளியிடக்கூடாதவை

ஆசா னுபதேச மரிவையர்கள் தம்புணர்ச்சி
மாசான சோரம் மனதடக்க முற்றபொருள்

மானம் பிறர்மான மறைத்ததொன்றைப் பின்கொடுத்தல்
தான மகத்திருக்குந் தனத்தின் பொருள்விளையும்

இல்லவளின் கேவலங்கள் மிவைபத்து மெவரிடமுஞ்
சொல்லவொண்ணு தீனமென்று சொன்னுர் மநுநூலோர்

தன்னகத்தா ளன்றிமறு தாரமே லாசையுற்ருல்
பின்னெருவர் வந்திவர்தம் பெண்டீரைச் சேராரோ

பறையன் பறையனல்ல பகர்ந்தமொழி தப்பிதமாய்
யறைவோன் பறையனென்றே யறைந்தாரே முன்னூலோர்

ஞானமுற்ற சற்குணங்கள் நாளுமில்லான் கற்றகல்வி
ஈனப்பறை யர்வீட்டி லிருக்கங்குங் காசலமாம்

தண்ணீரி னன்மை தரையுவரி னுலழியும்
பெண்ணேர்கள் நன்மை பிறர்கமலத் தாலழியும்

கோதில்லா மாதவங்கள் கோபத்தி னுலழியும்
வேதகுல நன்மை விபசாரத் தாலழியும்

மன்னவர்கள் நன்மை மனுநீதி யின்றலியும்
இந்நிலத்தி லுத்தமர்கள் யாவர்களுஞ் செய்தநன்றி

பொல்லாத தன்னகத்துப் பூவைகளா லழியுமென்று
வல்லோர்கள் முன்னுள் மநுநூ லுரைத்தனரே

பருவதமும் பார்க்கடலும் பார்வதியும் லட்சுமியும்
அரிதாய்ப் பிறந்திடத்தி லரியரனும் வாழ்வதுபோல்

பூமியிலே தங்கள்மனைப் பெண்ணுள் பிறந்தவிட
மாமியார் வீடே வளமென் றுரைப்பார்கள்

கேடு.

காமியர்கள் யானை காப்பதின்றி யேயடங்கா
நாமமிகு கோபமுண்டே னமதுரைகே ளாவடிமை

ஆதாய மின்றே லகிதச் செலவுகளாம்
காதாரக் கேளாச்சொல் கவியில்மிச்சங் கண்டெழுமே

சாட்சிமிஞ் சும்வழக்கில் தயிரிய மிஞ்சிடுமே
பேச்சில் சரசமிஞ்சிற் பேசுபரி காசமுமாம்

பத்தாவின் சொற்கடங்காப் பாவைதனைப் பெண்டாக
வைத்தான் படுந்துக்க மலிந்ததிக துன்பமுமாம்

ஓரவிகாரமா யுயர்ந்தோர்க்குச் சொன்னவர்கள்
ஊரழியு மேசுமக்க உலக மது நடுங்கும்
உப்பிட்ட பாண்டமிலே யுதிர்ந்த மரம்போலாம்
ஒப்பில்லா வாழ்வும்போ முற்றூர்பெற் றூர்பாழாம்
மாதேவி யான மலர்மா தகன்றிடுவாள்
மூதேவி சேர்வள் முடிவில் நரகமெய்தும்
என்னேரஞ் சண்டையு மீடில்லாச் சிரிப்பதுவும்
சின்னஞ் சிறுவிணக்கந் தீராக் கொடுங்கோபம்
வேசை யுறவும் விவேகமில் லாரிடத்தில்
ஆசராய்ச் சேவகங்க ளாறுமிவை கேடெய்தும்
தேடாப் பொருளழித்தல் தீராக்கோ பமிரண்டும்
கேடாய் முடியுமல்லால் கீர்த்திசற்றும் வாராதே
ஞானந் தவங்கல்வி நாடி வருங்கால
மானூர் மே லாசைதரும் வாழ்வும்போந் துக்கமுமாம்
இனநன்றி யைமறந்தார்க் கென்னே முடிவுமுண்டாம்
மனமறிந்து செய்ந்நன்றி மறந்தார்க்கீ டேற்றமில்லை
இமிசைப்பட் டாற்று தேழை யழுதகண்ணீர்
வமிசத்தைத் தேய்க்கு மரமறுக்கும் வாளெனலாம்
தீங்கான வாங்காரஞ் செல்லுமிட மானதன்றித்
தாங்கா விடஞ்செலுத்தில் தப்பாமற் கேடுவரும்
தாழ்ந்தா ருயந்தார் சரியா மெனவறிவால்
ஆய்ந்துமரி யாதைசெய்யா தாராகிற் கேடுவரும்
சரியான பேரையன்றித் தன்னி லதிகபல
பெரியோ ருடனெதித்தாற் பிராணபய முண்டாகும்
இத்தலத்தில் யாரொருவர்க் கெந்நாளு முற்பாதம்
புத்திப்ர தானமதாய்ப் பொல்லாங்கு செய்வார்கள்
புத்திரர்க ளில்லாமற் போவதுவு மல்லாமல்
அர்த்த தரித்திரரா யற்பாயு ளாவார்கள்
ஏற்கை யுடனிவரு மேதேது காரியமுந்
தீர்க்க விசாரணைகள் செய்யாரே யாமாகில்
பின்னாலே துன்பம் பிணக்குமிக வுண்டாகும்
அந்நாளே கிரியினாலேந்துகுடி கெட்டதொக்கும்

சத்ராதி சொல்லைத் தாந்தாம் நினைப்பவரும்
உற்றமனை யாட்டிக் குண்மை யுரைப்பவரும்
கொடுத்த கடன்கேட்டாற் கோபங்க ளுற்றவரும்
எடுப்பாய்ப் பெரியோரை யெண்ணமற் பேசினவர்
பெரியதனம் வந்தவுடன் பின்முன்னும் பாராமல்
இருவிழியாற் சற்று மேறிட்டுப் பாராதார்
இனியபரி தானத்தி லிச்சைவைத் தேயொருவர்க்
கனியாயஞ் செய்துபொல்லா வவதிவரச் செய்தவர்கள்
பாரிதனை விட்டுப் பரத்தைமே லாசைவைத்து
பேரெழுவ ருங்கடையிற் பேய்நாயாய்ப் பிறப்பாரே
கூடிப் பிரிவதனுல் கொடியகூ தாடுகையாற்
கேடு வருமிதற்குக் கெணிதமில்லை யென்றனரே
கண்ணினுற் காண்பதுவுங் காதினுற் கேட்பதுவும்
திண்ணமுடன் முன்பின்னுய்ச் செப்பினுர் கேடுவரும்
இற்றமகன் ஐஸ்வரிய மில்லான் கிளைகூட்ட
மற்ற பயருழிய னுலு மகிழ்ச்சியினுல்
எற்கு மொளியர்முதல் யாவரையுந் தூஷணித்தல்
தீர்க்கமிது கேடுவருந் திண்ணமென்ருர் வள்ளுவனுர்
நெஞ்சிற் பயமதுதா னேரிட யாவரையும்
அஞ்சவஞ்சஞ் செய்தா லவர்கட்குக் கேடுவரும்
தினையளவு நன்றிமுன்னஞ் செய்தாரே யாமாகில்
அணுப்போ திலுமறக்க லாகாது தான்மறந்தால்
அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதுபொல்லாங்குசெய்தால்
நிந்தனையும் வந்தவர்க்கு நேரிடுமென் றேயுரைத்தார்
ஆவலுடன் தன்பிழைப்புக் காகா வொருவருக்குத்
தீவினைக ளெவ்வளவுஞ் செய்வாரே யாமாகில்
நீண்டதொரு தன்னிழல்தா னின்றடியி லாவதுபோல்
ஆண்டுநா ருனுலு மவரைவிட்டுப் போகாதே
முன்னி லதிக மிடிமையது முண்டாகும்
பின்னுலே மூவேழ் பிறப்பும்விட்டுப் போகாது
செய்ததொரு தீவினைதான் செய்ததொருக் கொப்பாது
மெய்துமென்று சொல்லி யியம்பினுர் வள்ளுவரும்

அரிது.

அரிதரிது மாடவர்க ளாகப் பிறப்பதுதான்
உரியதொரு கூன்குருடோ டூமைசெவி டும்பேடும்
நீக்கிப் பிறக்கரிது நேராய்ப் பிறந்தாலும்
தீர்க்கமுற்ற ஞானஞ் சிறந்தகல்வி நற்குணங்கள்
வாரா தரிதரிது வந்தாலுந் தானதர்மம்
நேராய்த் தரிப்பரிது நெஞ்சிற் றரித்தாக்கால்
நீணிலத்திற் குன்றாமல் நெடுநாளும் வாழ்பெற்று
வானவர்கோன் றன்பதமும் வருமென் றுரைத்தனரே

இனிது.

இனிதினிது யேகாந்த மினிதினிதா மன்பருள்ளம்
இனிதினிகா ணக்கண்க ளேதுங்கேளாச்செவியே

கொடிது.

கொடிதுகொடி தென்பதுதான் குவலயத்தி லேவறுமை
இடரூ மதிற்கொடிதே இளமைதனி லேவறுமை
அதிற்கொடிய தாமருந்தி லகலாத வெவ்வியநோய்
அதினிற் பெருங்கொடிதே அன்பில்லாத் தம்பியுமாம்
அதனில் மகாகொடிதே அடங்காத பெண்சாதி
அதனிற்கொடி துண்டே யவளோ டுறங்குவதே

பெரிது.

பெரிது பெரிதிந்தப் பேருலகு நான்முகன்றன்
அரியப் படைப்பா யவன்மால் வயிற்றுதித்தோன்
மாலோ கடல்துயில்வோன் வாரி குருமுனிவன்
பாலொடுக்க மம்முனிவன் பண்டொடுக்கங் கும்பமதில்
கும்பமே பூமியாந் தலைப்பாரஞ் சேடனுக்கு
தம்பமொரு பூமியாந் தலைப்பாரஞ் சேடனுக்கு
சேட னுமையாள் சிறுவிரலி னாழியதாம்
ஈடில்லா வுமையா ளிறையவனுக் குள்ளொடுக்கம்
தொண்ட ரிதயத் தொடுக்க மிறையவன்றான்
தொண்டர் பெருமைதனைச் சொல்ல முடியாதே

முக்கியமுள்ளது.

தலத்திற் சிதம்பரமாந் தாருவினிற் சந்தனமாம்
பெலத்திலே மாருதமாம் பிர்ணவமா மந்திரத்தில்

வேதத்தில் சாமம் விரதமே காதசியாம்
மாதத்தில் மார்கழியா மலேதனிலே மாமேரு
நிலத்திலே காஷ்மீரம் ரிஷிகளி லேவசிஷ்டர்
குலத்தில் மறையோராங் குதிரையிலுச் சைச்சிரவம்
வாரத்தி லாதித்த வாரமந்த வான்மீனில்
பேருற்ற வாதிரையாம் பெருமுனியும் நாரதனும்
தனத்திற் குபேரன் தானமே தானமுமாம்
மனுக்களிலே ராசாக்கள் வாரியிலே பார்க்கடலாம்
மேகத்திற் புட்கரமாம் விலங்குகளிற் சிங்கமுமாம்
யாகந் தனிற்சிரேஷ்ட மச்சுவமே தம்மென்பார்
மாமணியில் மாணிக்க மலரிலே பத்மமலர்
காமதே னுப்பசுவில் கங்கைநதி யாம்நதியில்
தமிழி லகத்தியரர்ந் தந்தியிலே ராவதமாந்
தமனியமாம் லோகத்தில் தானியத்திற் செந்நெல்லாம்
பட்சிகளி லேயுவணம் பாம்பிலே வாசுகியாம்
மச்சத்தி லேமகரம் வடிவுதனி லோரரியாம்
கற்பில ருந்ததியாங் கபிலாரஞ் சித்தர்களின்
செப்புகின்ற வாக்கில் ஸ்ரீராமச் சந்திரனும்
அசுரர்குலத் திற்பிரக லாதனே யுத்தமனும்
வசிய முறுபடையில் வச்சிரா யுதமாகும்
சங்கினத்திற் பாஞ்சசன்யஞ் சந்திர னுங்கிரகத்தில்
தங்கும் பதவியிலே சாயுச் சியமாகும்
போகத்தி லிந்திரனும் புஷ்பகமாம் வாகனத்தில்
வாகொத்த வில்திறத்தின் வாள்விசயன் புத்திரனும்
உடையிலே பட்டாடை யுத்தியிலே யூகிமந்திரி
கொடையிலே தான்கர்னன் குணமூன்றில் சாத்மீகம்
மன்னும் புராணத்தில் மாபா ரதமாகும்
துன்னுஞ் சுடரொளியில் சூரியனே மேலொளியாம்
ஆடுமீ னிராறி லதிகந் துலாமாகும்
வாடாத நுண்ணிய நூல் வள்ளுவனர் சொற்குறளாம்
சுவையாறி லேலவண ந் துணைவரி லிலக்குமணன்
சிவமணியி லக்குவடந் தேசத்தில் தமிழ்த்தேசம்

பெறுமையிலே பூமிதேவி போரிலே ராவணனும்
திருமாலாம் ராகவனுஞ் செய்தபோ ரேயதிகம்

ஓசையிலி டியேற்றம் ஊரில யோத்தியதாம்
ராசரிலே சாதி ராஜனும் விக்கிரமன்

அன்பாக சொன்னவிந்த வறுபத்து நான்குபேர்
முன்பா முதன்மையென்று முன்னோர் மொழிந்தனரே

கோமையா லழிதல்.

தக்க விரணியனுஞ் சக்ரவர்த்தி மாபலிசேய்
மிக்கான வாலிவிண்ணோர் வேந்தன் நகுலனுடன்

பந்தமுறு கின்றசிசு பால னறுவர்களும்
நிந்தனையி னலே நிர்மூல மானர்கள்

கஞ்சன் சுயோதனனுங் காளமுனி வன்சகுனி
வஞ்சகஞ்செய் வாதாவி மாரீச னுங்கவந்தன்

பூதகிய சோமுகியும் பொல்லாத சூர்ப்பனகி
வாது புரிதந்த வக்கிரனு மென்பவனும்
சகடனு வில்வனுஞ் சலேந்திர மகாசூரன்
விகடன் பிரலம்பன் மேனுள சாசூரன்
எஞ்சுகொடி யோரா மிவர்கள் பதினெழுவர்
வஞ்சகத்தி னலன்றே வம்மிசத்தோ டேயழிந்தார்
சூரனுடன் தாரகனுந் துற்பானு கோபனுடன்
வீரமிகு சிங்கமுகன் மின்னுளே சோமுகியும்
தீயார மந்தத் திரிபுரா ளானவரும்
மாயமது கைடவர்கள் மாபாவி துந்துமியும்
மாலி சுமாலியுடன் மகிடா சுரன்சம்பரம்
காலகேய நிவாத கவசருடன் தாடகையும்
இடும்பன் பகாசூர னிரணியாட் சதனென்போன்
கடுங்கோப ருச்சதர்கள் காலகதி யாலழிந்தார்

தாசியங்கம்.

புருவநெறி யாழல்விழி புராளமா லேவெளியில்
தெரியாம லேயங்கச் சேட்டைகளுஞ் செய்யாமல்

அணுவளவுந் தலையை யசைக்காம லேமிடறு
தணியப் பெருமாமல் தந்தி லயக்யானம்

நீதசுரவீணை நேரா யதிற்சுருதி
நாத முறட்டி லயமுஞ் சரியாக
அமுர்த ரசதாளி யாய்மதுர சங்கீதம்
சமரசமாய்ப் பாடுமவள் தாசிமகள் தாசியென்பார்
சாயக நேர்விழியுந் தண்ணிய மனமும்வைத்துக்
காய த்தபிநயமுங் காட்டுமவ ளேபரத்தை
பாவராகச் சுருதியங்கம் பாங்காக வேதெரிந்து
மாதாளஞ் செய்பவளை மத்தளியா மென்றிடலாம்
பலராக கீதகங்கள் பாங்கான தாளங்கள்
நலமாகப் பாடுமவன் நல்லதொரு பாடகனும்
தாளத்தி லேநினைவு தரித்து நடனமிடும்
வாளுற்ற சம்பிரதன் மறுவில்லா நட்டுவனும்
தாளலய மார்க்கந் தப்பாம லிங்கிதமாய்
வீணும் பதச்சேவை விழைவோன் பரிசனனும்
வேசையாதம் மில்லாம்விட்டு மேவிடமுஞ் சென்றுக்கால்
காசுபண மற்பமாய்க் கணிசங் குலைந்துவிடும்

### வேசையர்கள் வாலாறு.

மிக்கவிலை மாதர் வீடுசந் தைக்கடையாம்
பக்கல்பொது வம்பலமாம் படுக்கைவீ டென்பதுகாண்
சந்தியிற்பாய் மெத்தையாந் தண்ணீர்ப்பந் தல்லதரம்
பந்தமுறு தேகம் படித்துறைய தென்றிடலாம்
சூதாடு சோலைதுகில் துடைகள்தண் ணீர்பந்தல்
மீதிலே கட்டிவைத்த மிக்க கதலிமரம்
மையாடுங் கன்னியவல் வாரணிந்த கொங்கைரெண்டும்
கையாடும் பந்து கடையெலுமிச் சம்பழமாம்
பாகமுறு செவ்வாய் படிக்கமதற் கொப்பாகும்
ஏகுமவள் மோகமதை எட்டுக் கனியெனலாம்
பாசமுட னிவ்வாறு பாங்குடையார் திங்குபுரி [ல
வேசையர்மே லாசைகொள்ளல் மேலவர்க்கு மேன்மையல்

### பெண்களால் பங்கமடைந்தவர்கள்.

சந்திரனு மிந்திரனுந் தன்னுடலிற் பங்கமுற்றார்
சந்ததஞ்சேர் வாலி சடாசூரன் கீசகனும்

எண்ணரிய வாழ்வுடைய இராவண னென்பவனும்
பெண்ணாலே பங்கமுற்றுப் பிராணலய மானார்கள்.
சுந்தோ பசுந்தரென்னுஞ் சூர ரிருவர்களும்
அந்தமிகு மோகினிமே லாசைகொண்டு மாண்டார்கள்
வையகத்தி லொப்பில்லா மரபினனு மெழில்சேர்ந்த
தையலரைக் கண்டால் சவுரியமு நில்லாது
மானார் குணங்குறியிவ் வாறே தெரியாமல்
தானவர்மேல் மோகித்தால் தப்பாமல் துன்பம்வரும்

புருஷன் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர்

ஆதி யருந்துதிமின் னாளுங் கவுசிகையுஞ்
சாதுகுண சாலி சந்திரமதி யென்பவளும்
உத்தமியில் மிக்காக வோது நளாகினியும்
பத்தாவின் வாக்கியபரி பாலனமே செய்தவராம்
கிரேதா யுகத்திற் கெடுகாலி ரேணுகையாம்
திரேதா யுகத்தினிலே சீதையெனும் பெண்ணாகும்
துன்னு துவாபரத்திற் றுரோபதையே கூற்றுவனும்
இந்நாள் கலியுகத்தி லில்லமெல்லாங் கூற்றுப்பெண்

பெண்களுக்கு சுவாதீனமில்லை யெனல்

பெற்றோர்கள் பேதையிலும் பின்பருவத் திற்புருடன்
மற்றுவரு மூப்பினிலே மைந்தர்களே காப்பவராம்
மூக்காலும் பெண்ணுக்கு முதன்மையொன்று மில்லாதால்
மிக்கான பெண்சன்மம் வீண்சன்ம மாகுமென்றார்
புருடனே தெய்வமென்று போற்றுகின்ற கற்புடையா
ளரிதான வாண்சன்மத் ததிகமென் று சொல்லினரே
பத்தாவே தெய்வமென்று பணிந்தேத்துங் கற்புடையா
ளூற்றமழை பெய்யென் றுரைத்தாலு மாரிபெய்யும்

பெண்கள் வரலாறு.

மெத்த வழகுடனே மேன்மையுள்ள மின்னாளோர்
புத்திரனைப் பெற்றவன்றே போமழகு மேன்மைகளும்
மேலான கன்னியர்கள் விரகத்தி லேயழுந்திக்
கோலமெல்லாஞ் சீரழிந்து குரங்காகிப் பேறுமில்லை

சதிராய்த்தன் னில்லேவிட்டுத் தனிவழிப்போ மின்னூர்க்குப்
பதிவிரதா தர்மமில்லே பங்கம்வந்து நேரிடுமே

சரசகுண மில்லாத தையலரைச் சேர்வதிலும்
விரைவாகச் சந்யாச வேஷமுறல் நன்ருகும்

அன்பில்லாப்பெண் ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச் சற்குணப்பெண் முகங்கண்டாற் போதாதோ

பேரிளம் பெண்கள்பல பேஎரப் புணர்வதிலும்
காரிகையாம் வாலேயொரு கன்னிதனேச் சேர்தல்நன்று

துற்கந்தம் வீசுமுடல் தோகையரைச் சேர்வதிலும்
நற்கந்தம் வீசுமுடல் நாரியரைக் காணல்நன்ரும்

பொண்ணொருத்தி பேசினுற் பேருலகெலாம்நடுங்கும்
பெண்ணிருவர் பேசினுற் பெருவானின் மீனுதரும்

அலேவாரி யுஞ்சுவறு மாயிழையார் மூவருக்கும்
பலபேர்தான் கூடிலென்ன பாடுபடு மோபூமி

ஆசைகொண்டாள் போலே யபிநயித்து மேல்விழுந்து
பேசுகின்ற வஞ்சப் பிரிய மறியாமல்

அன்பில்லா வேசைநமக் கன்புள்ளா ளென்றெண்ணி
நம்பினவ ரெல்லாம் நாயினுங்கி ழாவாரே

### கர்மகாண்டம்.

பூதலத்தோர்க் காகப் பொதியைமுனி நாயனுமுன்
காதலுறச் சொன்னகர்ம காண்டத் தியல்புசெல்வாம்

தர்மமில்லா தார்க்குச் சளமா மகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச் சொல்லுகிறேன்

செய்த வுருவழித்தல் சிவசெந்தை வதைத்தல்
வைதுதந்தை தாயை மனம்நோக வேபேசல்

நந்த வனமழித்தல் நாதாக்க ளேப்பழித்தல்
நந்த வனத்தில்மல ராத வரும்புகொய்தல்

திட்டமுட னிப்பாவஞ் செய்த கொடியோர்க்குக்
குட்டநோய் வந்து கொடுமைசெய்யு மென்றனரே

நாகமுட னூர்வனங்கள் நல்ல பறைவைபட்சி
சாகவே கொன்ற சண்டாள ரானவர்க்கு

குதிரைவலி காக்கைவலி குமரகண்டன் முகல்வலிகள்
சதிராக வேவந்து சாருமெனவிசைத்தார்

உத்தம ரைப்பழிந்தே உதாசினங்கள் பேசுவதும்
பத்தர்சித்தர் பாதம் பற்றித் துடர்ந்ததினுல்

ஆதி சிவதலங்க ளான தனைப்பழித்துக்
கோபப் படச்சினந்து கொடுங்கோபம் செய்வதினுல்

கற்புடைய மின்னுர்மேற் காதலது கொண்டதினுல்
தப்பிதமாய் பித்தந் தலைக்கேறி யேபிதற்றி

பண்பில் பலகிருமி பதினெட்டு மெய்துமென்று
முன்பாகத் தட்சணுமூர்த்தி மொழிந்தனரே

பச்சை மரங்கள்தம்மிற் பட்டைவெட்டி யேயுரித்தும்
மிச்சந் தளிர்கொழுந்து வேர்முதலாய் வெட்டுவதும்

குளிர்ந்த மரத்திலேகாய் கொம்பு தனைமுறித்தல்
அலர்ந்துமல ராய்ப்பூவை யனவரதங் கிள்ளிடலால்

மண்டைக் கரப்பன் வாயு வொருத்தலைநோய்
மண்டையிலே குத்து மகத்தான பீனிசங்கள்

மாருக் கபாலத்தின் வாய்வான நோய்தானும்
வீருய்வந் தெய்துமென்று விளம்பினுர் மாமுனிவர்
வித்தான தையழித்து மேலுமதைத் தின்றதினுல்
பக்தியுடன் கன்றுக்குப் பால்விடாத் தோஷமதால்

பாலக ரைப்பழித்து பால்கொடாத் தோஷமதால்
சால விளம்பயிர்கள் தன்னை யழித்ததினுல்
மானுர்க்குக் கெர்ப்பநோய் வருமவர்க்கு மைந்தரில்லை
ஆனுலிப் பாவிகள னந்தரங்கஞ் சொல்லவொண்ணு
சூரியனைத் தோத்தரியாத் தோடம தானுலும்
நீரிலுயி ரைப்பிடித்து நெருப்பிலிட்டுச் சுட்டதினுல்
மடிப்பாய்ப் பிராணிகளை மாயவே செய்வதினுல்
துடிக்கவுயி ரோடதனைச் சுடுமணலிற் போடுவதால்
நல்ல நிழல்மரத்தை நாருரித்துக் கொன்றதினுல்
வல்லமையாய்ப் பச்சை மரங்கள் தமை வெட்டினதால்
பசித்தோ ரிருக்கவரைப் பாராம லுண்டதினுல்
நிசமாய்ச் சுரதோடம் நேருமென் றேயுரைத்தார்

மாதா பிதாவை மனம்நோகச் செய்ததினுல்
வேதாந்த சற்குருவை மெய்நோக வைத்ததினுல்
வீம்பான பேச்சுகளும் விசுவாச பாதகமும்
நாம்பெரியோ ரென்று நல்லாரை யும்பழித்தல்
தெய்வ நிலையழித்தோர் தினந்தினமும் பொய்யுரைத்தோர்
வைகத்திற் பாண்டுநோய் வந்தே மெலிந்திடுவார்
ஊனுன தைத்தின்ன உயிர்வதைகள் செய்வதினுல்
மானுதம் கற்பழித்து மரங்கள்தமை வெட்டினதால்
புண்ணியந்தான் செய்யாமல் புண்ணியர்க ளைக்கெடுத்துத்
தண்ணீர் குளமேரி தன்னை யுடைத்துவிட்டும்
நீரு தணப்பதுவும் நிறைகள் குறையவிற்றும்
மாறுபட நீரில் மலமூத்தி ரங்கள்விட்டு
துராகதமா யிவ்வாறு துன்பங்கள் செய்வதனுல்
கிராணிக் கழிச்சல்வந்து கெடுவா ரெனவுரைத்தார்
பொல்லாக் கடுங்கோபர் பொய்யே மிகுத்துரைப்போர்
சொல்லுவதைப் பின்மறுத்துத் தூஷணித்துப் பேசுபவர்
உண்டுமிகப் பேச்சுகளால் ஊராரை வைதவர்க்கும்
திண்டுமிண்டாச் சிவசெந்தை தின்னவே கொன்றவர்க்கும்
கன்னத்திற் புத்து கன்ஞேசி விப்புருதி
கன்னத்திற் சூலை கடிதான பல்லரணை
தந்தரோ கங்கள் சகிக்கரியா வாய்ப்புற்று
தந்தரோ கஞ்சூலை தப்பாமல் வந்திடுமாம்
சற்குருவைத் தூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர் பாதையிலே முள்ளதனைப் போட்டவர்க்கும்
பச்சை மரமதனைப் பங்கமுற வெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப் பூவிலைகா யுதிர வடித்தவர்க்கும்
வண்டுகடி கறப்பன் மகத்தான குட்டநோய்
என்றுமிவர் கட்டுவந் தெய்துமென்ருர் மாமுனியும்
பத்தர்சிவ பத்தர் பரசிவ யோகிகளைச்
சித்தங் கலங்கவே செய்தகொடும் பாவிகட்கும்
வில்லாலு மம்பாலும் வெடிமருந்துக் குண்டாலும்
கல்லாலும் பொல்லாக் கபடத்தாற் சீவசெந்தைக்

கொன்றகொடும் பாவிகட்குக் கொடிதான மார்பாணி
கண்டமாலைப்பிளவை கழல்வாதம் வந்திடுமாம்

கங்கைதனிற் பெண்கள்தமைக் கவனித்துப் பார்த்தவர்க்கும்
ஏங்கியவர் போகத்தி லின்பமுற்ற பாவிகட்கும்

மின்னாரைக் கண்டு விலகாமற் போனவர்க்கும்
பின்னவரைத் தூஷணமாய்ப் பேசிப் பழித்தவர்க்கும்

தப்பிதமா கப்பொய்ச் சத்தியங்கள் செய்தவர்க்கும்
மெய்ப்பான தெய்வத்தை மேவிநிந்தை செய்தவர்க்கும்

பலதரமு முயிர்வதைகள் பண்ணுவதைக் கண்டிருந்தும்
விலகாமற் பார்த்திருந்த வேட்டைநா யானவர்க்கும்

கண்ணில் வியாதிவரும் கண்ணொளிவு தான்மறையும்
தோண் ணூற்று யாறுநோய் துடருமென்றார் மாமுனியும்

பேறான நல்லவுயிர்ப் பிராணிதனைத் தான்பிடித்து
கூறாது தூக்கிவைத்துக் கொன்றகொடும் பாவிகட்கும்

கோவதனைக் கொன்றவர்க்கும் கொடிதான கண்ணிவைத்து
சீவசெந்தை நீர்த்துறையிற் சேதமே செய்தவர்க்கும்

அலரும் பிராணிகளை யழுக்கி யதனுடைய
தலையறுத்து மிக்கதுடல் தன்னை யெடுத்தவர்க்கும்
ஈன மிரக்கற்ற யிராட்சதரை யொத்தவர்க்கும்
ஆனந்த வாழ்வற் றழுக்கு மெனவுரைத்தார்
திருந்தவே முற்பிறப்பிற் சேயிழைமார் தங்களுக்கு
மருந்திடு செய்து மயக்கிக்கற் பழித்தவர்கள்
மயலான பெண்போலே மறுஜென்மத் தினிலெவரும்
சயரோக மாகிவந்து சாகுவா ரெனவுரைத்தார்
மார்க்கமதில் நிற்கு மரங்கள்தமை வெட்டினவர்
பூக்கமழு நல்மரத்தின் புறத்தொலியைத் தானுரித்தோர்
வீணிலே பூடுகளை விருட்சங்க ளைமுறித்தோர்
ஊனுகின்ற கால்முறித்தே டோடாமற் செய்தவர்கள்
தம்பமாய்ச் சீவசெந்தின் சங்கங் களையுடைத்தும்
கொம்பு களைமுறித்தும் கொடும்பாவம் செய்தவர்க்கு
வாதங்கள் வந்து வழங்காமற் கால்கைகள்
கூத லூட னளிரும் குளிரும்வரு மென்றனரே

பலபேர் வயிறெரியப் பண்ணிவைத்த பாவிகட்கும்
தலைஞ்சேர் பெரியோரை நடுநடுங்கப் பேசினர்க்கும்

மாறூ மனக்கவடு வைத்த வெகுபேரைச்
சீரழிவு செய்தவர்க்குஞ் சிலர்பசிக்க வுண்டவர்க்கும்

சண்டாள தத்துவங்கள் சதாகாலஞ் செய்பவர்க்கும்
மிண்டான துன்ம வியாதிவந்து சூழுமென்றூர்

பட்சிமிருகங்கள் பாம்புமுத லானவற்றை
மெச்சிப் பிடித்தடைத்தால் விலங்குவர்க்கே யெய்துமென்

சாலப் பலவுயிரைத் தண்ணீரி னண்டுகளைக் [றூர்
காலை முறித்தவர்க்குக் கால்கை முடங்கிமென்றூர்

ஒப்பனை யனாவை.

வெடுக்கென்ற சொல்லாரை மேலோ ரகத்தில்வைத்தால்
மடத்தையுங் கட்டியதில் வன்குரங்கை வைத்ததொப்பாம்

எண்ணுமல் வஞ்சகப்பெண் ணின்சொல்லை நிச்சயித்தால்
மண்குதிரை தனை நம்பி மல்காற்றிற் சென்றதொக்கும்

அகாமியமுள் ளாரெனினு மறிவாள ரைச்சேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த வாயசந்தனை நிகர்ப்பார்

தன்னவரே யானுலுஞ் கார்பரிந்து சேர்தல்நன்று
துன்னுசுடர் விளக்கெனினுந் தூண்டுகோல் வேணுமதாம்

கடவுள் விதிவெல்லக் கடவரெவ ராருமில்லை
மடலிலே யிட்டாக்கால் குடலிலே தங்காதே

நிலையாய் நிமலனடி நேர்ந்தாற் குறையுளதோ
மலைமே லிருப்பவரை வந்துபன்றி பாய்ந்திடுமோ

பெரியோர் திருவளந்தான் பேதித்த லார்தீர்ப்பார்
கரிமலைசாந் தாலமண்ணுங் கட்டியது தாங்கிடுமோ

கடந்தவருஞ் சொல்லாத காலம்வெல்லப் போகாது
உடைந்தசங்கில் சற்றுமொரு வோசை பரியாது

மட்டிகட்கு நல்லபுத்தி வர்ணித்துச் சொன்னுலும்
இட்டமுற்ற தன்குணம்போ யெய்தாது நற்குணந்தான்

கடையரால் மேலோர்க்குக் கருமங்க ளும்விழலாம்
மூடையதால் தண்ணீரில் முக்காலத் தினுமழுக்காம்

வலியோரைச் சார்ந்தவர்கள் மற்றெவர்க்கு மஞ்சுவரோ
கொலையேதா னிலக்கானல் குருடனெய்ய மாட்டானோ
தலையானோரைச்சேர்ந்தால் தால்வில்லை தாழ்வுவந்தால்
புலிகரடிமை பட்டுங் கறிக்காசைப் பட்டதொக்கும்
மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்த மாட்டாது
விற்பனமேலோர்கள் மெலிவாகிப் போகிலென்ன
குப்பையிலே போட்டாலும் குன்றிமணி மங்காதே

நேசருடன்பிறந்தோ நிலத்திகன்று வேறுபட்டால்
ஊசியிலே கப்பாகி நூல்நுழையா வாறாகும்

ஏற்காத வைசெய்தா லிகழ்ச்சியென்றும் போகாது
ஊர்வாயை மூட வுலைமூடி தானுமுண்டோ

எட்டாக் கனியதனுக் கேராசைப் பட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தைசொட்டுப்போட்டால்வருமோ
நாட்டுச் சுரைகறிக்கு நாட்டிணி லெய்துமல்லால்
ஏட்டுச் சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்
மாறுபாட்டுக் காரன் வாக்குநிச மென்றறிந்தால்
எறிவிட்டு மேணிதனை யெய்த்துவிட்ட வாறாகும்
வாழ்வுடையோர் முன்னே வறுமையுற்றோர்சொல்நிலையா
ஏழைசொல் லம்பலமு மேறாது கண்டீரே

கொடையாளி யேவறுமைக் குள்ளாகிலுமீவன்
கடுகுசிறுத் தாலுங் காரமது போகாதே

விற்பனர்க்கு மூடன் மேலாம் பரமானல்
குப்பை யுயர்ந்து கோபுரமுந் தாழ்ந்ததொக்கும்

இட்டமுற வாழ்ந்தோர்க் கியல்புதப்புங் காலமந்தக்
கெட்டவர்க் குற்றோர் கிளைதனிலு மில்லையில்லை

இணக்கமுடன் நல்லபுத்தி யெவளவுங்கே ளார்குரைத்தல்
பணத்துக்கோ ரம்புகொண்டு பாழிலெய்த வாறாகும்

காலிபயிர் தின்னுமற் காப்பதுவே வேலியுமாம்
வேலிபயிர் தின்றால் விளைவதொரு போதுமில்லை

நிலையான காரியமு நில்லாது மந்திரத்தால்
கல்லைப்பார்க் கலைத்தாக்கால் மூலைப்பால மருந்தலவோ

### கூடாவொழுக்க மகளிர்.

பார்ப்பள வில்திரும்பிப் பாரா னுரைத்தமொழி
யேற்றுள் மருவிகள் எதுவுமோ சொல்லாளாம்
கள்ளன்போல் மற்கட்டிக் கவிழ்ந்தாலு மல்புரிவாள்
உள்ளன்புக் கார ருடன்போயுஞ் சண்டைசெய்வாள்

ஆசையுட னாபரண மடைக்காய் முதல்கொடுத்தால்
நாடாள் புறங்கையி னால்தனைத் தட்டுவளாம்
அங்கையாற் றொட்டா லாலவராப் போற்சீறி
சங்கைகெடப் பேசிச் சத்துருவைப் போல்பார்ப்பாள்

அயலா ருடனேவிளை யாடியே கூடுவளாம்
மயலாக் கணவன்வந்து மருவிச் சரசஞ் செய்தால்
மெய்யதிலே நோய்கள் மிகவெனவுந் தர்க்கமிட்டு
பொய்யாணை யிட்டுப் புறங்காட்டி யேபடுப்பாள்

முந்தியுறங் கிப்பெரு மூச்சுவிட்டு எத்தனையோ
சந்தோஷஞ் சொன்னாலுஞ் சற்றேனு மேயிறங்காள்
ஆரிடத்திற் போடாவென் றவன்கொடுப்ப தையெறிந்து
சீறிச் சினந்து தெய்வமே யென்றழுவாள்

நாடான திற்பெண்கள் நான்குவகைச் சாதியிலும்
கூடா வொழுக்கங் குறையிதுவா மென்றனரே

### அபிலாசை யுற்றமகளிர்

ஆடவர்க ளென்னாளு மாசைகொண்ட பெண்குறிப்புங்
கூடு மொழுக்கக் குறிப்பதனைச் சொல்லுகிறோம்.

பலதாளு மாடவனைப் பார்த்தகண் ணாயிருப்பாள்
தலைவனவ லைப்பார்க்கில் தலைகவிழ்ந்து மேசிரிப்பாள்

உள்ளன்பு காட்டாளா யோங்கிப்பெரு மூச்சுவிட்டு
தள்ளாக் குழந்தைதனைத் தழுவி முத்தமிட்டு

பாங்கியரைப்பார்த்தழுவாள் பாங்கனைப்பார்த்தேநகைத்து
பாங்காய்த் தலையசைத்துப் பல்லைக் கடித்துறுக்கி

பிறரெவரை யும்நிறுத்திப் பேசுவது போல்பேசிப்
பிறகாலே போய்மூக்கைப் பிசைந்துதும் மல்தும்மி

தலைவனன்பு வைத்தாலுந் தன்னுடன் பொய்யென்று
தலைவன்மொழி கேட்டுமவன் தன்தொழிலை யும்மகிழ்ந்து

அடவன் வீட்டுக் கடிக்கடிதான் போவதல்லால்
ஆடவனைக்கண்டா லறக்கணிசி நாணுதலும்
கொம்பனையார்க் குள்ளன்பு குறிப்பறித லாகுமென்று
முன்பாக நூலுகளில் முன்னோ ருரைத்தனரே

பெண்களுடைய தத்துவம் பத்துக்கும் விபரம்.

மிக்கவின் னூலின் மேன்மைக் குறிப்பறிய
தக்கதொரு பெண்கள்பத்து தத்துவத்தைசொல்லுகிறோம்
பொன்னிறமு மல்லிகையின் பூமணமுந் தாமரையும்
வன்ன மலர்முகமு மாசற்ற மூர்தமொழி
தனதானிய வாழ்வுஞ் சார்ந்தசன சேகரமும்
இனமொடு வாழுபவ ளிவள்தெய்வ தத்துவமாம்
இரக்கம் வணக்க மின்ப முறுதேகம்
சிறக்கவே தானதர்மந் தெய்வ விசுவாசம்
வன்கொலைகண் டஞ்சுமவள் மானிட தத்துவமாம்
முன்சொல்லும் நூலதனிற் முறையி லுரைத்தனரே
நித்திரை தான்மிகுத்தல் நெடுமூச்சுச் சோம்பல்களும்
மெத்தவே கொட்டாவி வீடெல்லாம் போய்த்திரிதல்
சுத்தமில்லாத் தேகம் சுசியில்லாப் போசனமும்
நத்துகின்ற மின்னாள் நாகதத் துவமாகும்
ஆற்றில் குளத்தி லலைகடலி லேமனைவி
லேற்றமிகு பெண்களுட னென்றும்விளை யாடமனம்
நாணமில் லாமையென் னுளுநங் கொடுங்கோபம்
வாணுதலா ளேயியக்க மாதென்று சொல்லுவதாம்
பரிமள சுகந்தாதி பகிரரத்ன வாபரணம்
சரசசங் கீதவித்தை தன்னில் வெகுவிருப்பம்
சார்ந்த தினமுந் தர்மசிந்தை கற்புடையாள்
காந்தர்வ தத்துவத்தின் கன்னியென்று சொல்லிடலாம்
வெட்கமில் லாமை மிகுந்தபல போசனமுந்
துற்கந்த வாசந் துடியான வார்த்தைகளும்
ஊட்டின சரீர முடை யழுக்கு மாமிசமு
மூட்டமது வுண்ணல் உயர்வில்லாத் துர்நடத்தை

நித்திரையில் லாமையிவை நேர்ந்தபெண் ணுமே பேயின்
தத்துவமா மென்று சாற்றினர் முன்னோர்கள்
அக்கினிக் கண்ணு மழகுசற்று மில்லாமை
வக்கணையா யாடவரை வலியப் பிடித்திழுத்தல்
மாறுபா டானமன மல்லுக்கட் டிப்புணரும்
நாரியவள் தானே ராட்சதரின் தத்துவமாம்
ஆரிடத்தி லானுலு மன்புசற்று மில்லாமை
மாறிமாறிப் பார்த்தால் மயிர் தூவு தூறுதலே
வேறு முகம்பசியு மிகுந்த பயமுடையாள்
காகத்தின் தத்துவத்தின் கன்னியவ ளாகுமென்றாள்
கூடுகின்ற வாடவரைக் கூர் நகத்தாற் பல்லதனுல்
நாடிக் கடிப்பதுவு நாணங்கற் றில்லாமை
நிறமதுவும் பங்கமதாய் நேத்திரத்தால் மருட்ட நல்ல
குறங்கினிட தத்துவத்தின் கொம்பனையா ளாகுமென்றான்
திண்டுமிண் டானசொல் தேகசுத்த மில்லாமை
வண்டு வெடித்தகுரல் மல்லுக்கட் டிப்புணர்தல்
மழுமாரி கண்டவரை வலியப் பிடித்திழுப்பாள்
கழுதையின் தத்துவத்தின் கன்னியவ ளாகுமென்பார்
வையகத்தி லேமேலா மணவாளன் சொன்னபடி
மொய்குழலார் சாதி மூன்றின் குறியுரைப்போம்
மானை நிகர்த்தவிழி வனச மலர்முகமுந்
தேனை நிகர்த்தமொழி தேமற் படர்ந்தஉடல்
சுருண்டு நெரித்தகுழல் தும்பிப் படைநடையுந்
திரண்டகோ வைக்கனிவாய் செண்பகப்பூத் தேகமுமாம்
இன்னடையுந் தென்னை யிளம்பாளை வாசமுமாம்
அன்ன நடையு மழகில் ரதியெனவும்
வட்டமாய்த் தங்கநிற மான விளமார்பும்
இட்டமுறு கலவிக் கிசைந்திட்ட சற்குணமும்
தர்க்கமிடு மின்கோபி சாப்பாடு மற்பம்தாம்
இக்குறியின் மாதவளு மின்பமுள மான்சாதி

பேட்டைக்குதிரைச்சாதி.

உயர்ந்து குளிர்ந்தவுச்சி யுட்குழிந்த கன்றகண்கள்
உயர்ந்து பெருத்தகொங்கை யுதடு பருத்திருக்கும்

சாலப் பருத்தமயிர் தந்தமோ நீண்டிருக்கும்
தால விடைபருத்துத் தாருபோ லேவுயரும்
அடக்கமென்று மில்லாம யல்குல் பணைத்திருக்கும்
மடக்கொடியாள் பேசுகின்ற வாய்மை குளறுதலாம்
போசனத்தி லேபிரியம் புணர்ந்தவர்மே லும்பிரியம்
வீசும் புலால்நாற்றம் மிக்கபகல் நித்திரையாம்
தீரா வெறுப்புஞ் சிவந்த பழியுதடுங்
கூறுன மாதுபெட்டைக் குதிரையென்று சொல்லினரே

### பிடியானைச் சாதி.

சாலப் பருத்தநெற்றி தாடை செவிநாசி
காலுடனே கைகாலுங் கழுத்து மிகப்பருத்து
சுருண்டு சிவந்தமயிர் தொங்கு மதரமுமாம்
முரண்டு நிதம்சண்டை மொழியு மிடிபோலாய்
அல்லும்பக லும்கலவி யானதிலே சிந்தையுமாய்
பல்லு மிடையுளதாய் பாவத்துக் கஞ்சாமை
யார்க்கு மனுகூலி யானை மதநாரி
பார்க்கிற் பன்னிரண்டு அங்குலமா மல்குலது
விடியளவும் சண்டைவிடாள் வெட்கத்துக் கஞ்சாளாம்
பிடியானைச் சாதியென்று பேசினார் முன்னோர்கள்
இன்னம்சில நீதி யெடுத்துவே கூரவென்றால்
வண்ணமா யிந்நூல் வளறு மெனமுடித்தேன்

### வாழி.

ஐங்கரனும் வாழி ஆறு முகன்வாழி
மங்கைபா கன்வாழி மாயன்பிர மன்வாழி
தூயமுனி வோர்வாழி சுத்தசைவர் தாம்வாழி
நேயசெங் கோல்செலுத்தும் நிருபர் மிகவாழி
கற்புடைய மாதர் கவிவாணர் தாம்வாழி
விற்பன மாய்படிக்கும் வித்தகரும் வாழியவே

## மநுநீதிகாதல்

முற்றுப்பெற்றது.

# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சீறாகீர்த்தனை | 3 | 0 | 0 |
| சீறாப்பாட்டு உரை முதற்பாகம் | 4 | 0 | 0 |
| ஷை இரண்டாபாகம் | 4 | 0 | 0 |
| கசுசுலன் பியா | 3 | 0 | 0 |
| நேரவழிதீன் மொழிரப்பு | 1 | 8 | 0 |
| ஷை திக்கு | 2 | 0 | 0 |
| வெள்ளாட்டிமசாலா | 0 | 12 | 0 |
| ஷை திக்கு | 1 | 0 | 0 |
| தாகபத்து இந்து | 1 | 0 | 0 |
| நசீயத்துல் மூமுனீன்மாலை | 2 | 0 | 0 |
| பத்துகுல்மிசிரி | 1 | 0 | 0 |
| தீன்னெறி வசனம் | 2 | 0 | 0 |
| மெஞ்ஞான ரத்தின அலங்கார கீர்த்தனை | 1 | 0 | 0 |
| சத்துருசங்காரம் | 1 | 0 | 0 |
| அசன்பேகதை | 0 | 12 | 0 |
| சைபித்தூன் கில்லா | 0 | 6 | 0 |
| ராஜநாயகம் | 1 | 0 | 0 |
| ஷை கிளேஸ் | 1 | 8 | 0 |
| ஜியாங்கிஷாற்புதம் | 1 | 8 | 0 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 1 | 0 | 0 |
| சார்தர்வேஸ் கதை | 1 | 0 | 0 |
| நசீஹத்துல் இசுலாம் | 0 | 4 | 0 |
| மரண விளக்கம் | 0 | 6 | 0 |
| அபூனுவாசின் கதை | 0 | 4 | 0 |
| இராஜாமணிமாலை | 1 | 4 | 0 |
| முகியத்தீன்மாலை | 0 | 10 | 0 |
| இராஜாமணிமாலை முகியத்தீன்மாலை 2-ம் சேர்ந்தது | 2 | 0 | 0 |

கேட்லாக் வேண்டியவர்கள் அடியிற்குறித்தபடி எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

உலகெங்கும் புகழ் பூண்டு வித்துவான்களால் நன்கு மதிக்கப்பெற்ற நாடகாசியர் **T. T.** சங்கரதாஸ்சுவாமி அவர்களாலியற்றிய பரமானந்தப் பக்திரசக்கீர்த்தனை விலை அணா 8.

**இட்டா, சக்கரபாணி நாயுடு,**

புக்ஷாப் மதுரை

# விளம்பரம்

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் எங்களிடத்தில் தமிழ், நாவல்களும், கதைப் புத்தகங்களும், தோத்திரங்களும், புராணங்களும், நாடகங்களும். வயித்தியங்களும், சோதிடங்களும், கீர்த்தனைகளும் ஜாவளிகளும், டிராம சரித்திரங்களும் திருப்புகழ், காவடிசிந்துகளும், ஆறுமுகநாவலர் புத்தகங்களும், ஸ்கூல் புஸ்தக முதலான தினுசுகளும் இன்னும் வேறே வேண்டிய புஸ்தகங்களும், விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| விநாய புராணம் வசனம் | 4 | 0 | 0 |
| தாயுமானவர் மூலம் உரை | 4 | 0 | 0 |
| பாலகாண்டம் மூலம் உரை | 4 | 0 | 0 |
| குமரேசர் சதகம் மூலம் உரை | 1 | 0 | 0 |
| அறப்பளீசுர சதகம் மூலம் உரை | 1 | 0 | 0 |
| பஞ்சபாண்டவர் வனவாசம் | 0 | 6 | 0 |
| வைகுந்தம்மானை | 0 | 6 | 0 |
| ஷை பெரிய எழுத்து | 0 | 12 | 0 |
| புலந்திரன் களவுமாலை | 0 | 6 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை மட்டம் | 1 | 0 | 0 |
| ஷை பெரிய எழுத்து | 1 | 8 | 0 |
| நல்லதங்காள் கதை | 0 | 4 | 0 |
| கோவிலன் கதை | 0 | 5 | 0 |
| அல்லியரசாணி மாலை | 0 | 5 | 0 |
| பவளக்கொடி மாலை | 0 | 6 | 0 |
| நளன் கதை | 0 | 5 | 0 |
| ஷை பெரிய எழுத்து | 0 | 8 | 0 |
| தேசிங்குராஜன் கதை | 0 | 6 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேத அலங்காரம்மானை | 0 | 6 | 0 |
| கதிரேசன் ஆனந்தக்களிப்பு | 0 | 4 | 0 |
| உலகமெங்கும் புகழோங்கப்பெற்ற டிராமா உபாத்தியாயர் T. T சங்கரதாஸ் சுவாமி அவர்களியற்றிய பரமானந்தப் பக்திரசக்கீர்த்தனை | 0 | 6 | 0 |
| வேலுச்சாமிதாஸ் அவர்களால்பாடிய புதிய பெரிய பக்திரசக் கீர்த்தனங்கள் | 0 | 5 | 0 |

**இட்டா, சக்கரபாணி நாயுடு,**

புத்தகஷாப், மதுரை.